Registered as a News Paper

பக்கம் – 16

# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—03 14–20 மார்ச் 2003

## புலிகள் பொறுமை இழப்பரா?



## எதிர்ப்பு வியூகத்துள் சமாதானம்!

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 14 .03.2003

# சமாதானத்தின் குரல் வளையை நெரிக்கும் ஆயுதப்படைகள்... சர்வதேச எல்லையை மீறும் ஆக்கிரமிப்பு அதிகாரம்

இது சமாதான முன்னெடுப்பு களுக்கான சோதனைக்காலம்

விடுதலைப்புலிகளின் பொறுமை யையும், அமைதித் தீர்வு மீதான அவர்களின் பற்றுறிதியும் தகர்த்து, அவர்களை போரின் பால் திசைதிருப்பி தங்களின் அரசியல் அபிலாசை களை, எப்படியேனும் எந்த விலை கொடுத்தேனும் மீண்டும் அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொள்வதன் மூலம் எட்டுவதற்கு சந்திரிகா ஜே.வி.பி. கூட்டணிப் பேரினவாதக் கும்பல் தீவிர முனைப்புடன் செயற்பட்டு வரும் காலம்...

ஆளும் அரசாங்கத் திற்கும், அதிகார பீடத்து அரசிற்குமிடையிலான, பலப் பரீட்சையில் தமிழ்மக்களையும், அவர்களது அரசியல் உரிமைகளையும் இரு தரப்பும் பகடைக் காய்களாக்கி, மூன்றாந்தர இனவாத அரசியல் அரங்கத்தில் ஈடுபட்டுள்ள காலம்.

ரணில் தலைமையிலான அரசாங் கம் அதன் பாதுகாப்பு அமைச்சும், ஏனைய நிர்வாகங் களும், சுயாதீனமான முடிவெடுக் கும் திராணியற்ற, அதிகாரவலு ஏதுமற்ற ஒரு பொம்மை ஆட்சி நடத்தும் ஒரு உயிர்ப்பற்ற கட்டமைப்புத்தான் என்பதை சர்வதேச சமூகமும், தமிழ் மக்களும் மெல்ல மெல்ல புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ள காலம்...

சிறிலங்காவின் அமைதியும், சமாதானமும், சகவாழ்வும் குறித்த பொது மனித நம்பிக்கைகள் மீண்டும் கேள்விக் குறியாகத் தொடங்கியுள்ளகாலம்...

இனப் பிரச்சினைக்கு தமிழர் தரப்பிலிருந்து வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற, நியாயமான அரசியல் தீர்வுக்கான, சமாதான நோக்கிலான நல்லெண்ண சமிஞ்சைகளை, புரிந்துணர்வுடன் கூடிய விட்டுக் கொடுப்புகளை அதிகாரப் பீடத்தவரினதும், அவரின் கீழான பாதுகாப்பு படையினரின் அத்துமீறிய அடாவடிக் காடைத் தனத்தை பொறுமையுடன் புறந்தள்ளி, சர்வதேச சமூகத்தின் அமைதி முயற்சிக ளுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்கும் இயல்பார்வத்தை - சிறிலங்காவின் ஆளும் பேரினவாத அதிகாரவர்க்கமும் அவர்களுக்கு பின்பலமான தாகவும், அனுசரணையாளர்களும் நின்று செயற்படும் உன்னத மற்றும் புறநிலைச் சக்திகள் யாவும், தமது சுயா திபத்திய, வெறி மிக்க அரசியல் இலக்குகளைவென்றெடுப்பதற்கான அம்சங்களாக செயற்பட்டு வருவது தான் இன்றைய காலத்தில் சிறிலங்கா எதிர் கொள்ளப்போகின்ற ஆபத்தின் புயல்மையங் களாகியுள்ளன.

இதனை கடந்த ஒரு சிலமாதங் களுள் நடைபெற்ற -தொடர்ந்தும் நிகழ்த் தப்பட்டு வருகின்ற பல அரச பயங்கர வாதத் தின் முத்திரை கொண்ட பல சம்பவங்கள் நிருபித்தும் வருகின்றன.

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேச அனுசரணையுடன் கூடிய சமாதான சூழல், ஆட்சிபீடம் எறிய புதிய அதிகாரவலு வற்ற ரணில் தலைமையிலான அரசாங்கத் தினால் வரவேற்கப்பட்ட போதிலும் ஒட்டு மொத்த மாக சிங்கள பௌத்த இனவாத பாரம்பரிய அரசியல் தலைமைகளும் மதத்தலைமை களும் அதனை நேரடியாகவும் மறை முகமாகவும் நிராகரிக்கவே செய்தன. இது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

சமாதானத்தை எட்டு வதற்கு உரிய மார்க்கமாக யுத்தத்தை தேர்வு செய்து அதனை பிரகடனம் செய்து, நியாயப்படுத்தி உலகலாவிய ரீதியில் 'கருங்காலி' களைப் பயன்படுத்தி பிரசாரம் செய்து, தமது அரசியல் அதிகாரபீடத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக தங்கள் தேசத்தின் சகல வளங்களையும், அளப்பரிய மனிதவலு வையும் நிர்மூலமாக்கத் தயாராகி செயற்பட்டு வந்த சந்திரிகா தலைமையிலான சர்வாதிகார ஆட்சியின் பெறுபேறுகள் விளக்க வேண்டிய வையல்ல....

அரச பயங்கர வாதத்தின் அசைக் கவே முடியாத ஒரு அடையாளச் சின்னமாக அவர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள் ளார். இன்று ரணில் தலைமையில் அரசாங்கம் என்ற பெயரில் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப் பட்டிருந்தாலும் கூட அது சுயாதீனமாக, முழுமை யாக தீர்மானம் எதனை யும் எடுக்கும் ஆளுமை கொண்டதாக இல்லை. அதன் ஆயுளை தீர்மா னிக்கும் ஆற்றல் சந்திரி காவின் கைகளிலேயே உள்ளது. ஆயுதப் படை களின் பூரணகட்டுப்பாடும், அதன் தலைமைகளைத் தீர்மானிக்கும் அதிகார சக்தியும் அவர் வசமே உள்ளது. முப்படைத் தலைமைகள் அவரின் பூரண ஆசீர் வாதத்தில், அவரது அபிலாசைகளை நிறைவேற்றும் 'ஆமா சாமி' காரராகவே உள் ளனர்.

தேசத்தின் எதிர்காலத்தைவிட சந்தி ரிகாவின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதே அவர் களின் இலட்சிய இலக்கு.

இந்த நிலையில் சிறிலங்காவின் பிரதமர் ரணிலோ, அவரின் கீழ் இயங்கும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவோ வெறும் மனிதர்களாக இயங்க வேண்டியவர்களாகவேயுள்ளனர்.

இது தான் சிறிலங்காவின் பரிதாபத்திற்குரிய ஆபத்தான நிலைக்குக் காரணமாகவும் உள்ளது.

சமாதானத்தைப்பற்றி பேசும் ரணில்;

சமாதானத்தைப் பற்றிப் பேசினா லும் (வெறும் பேச்சுத்தான்) ரணிலின் சமா தான நகர்வுகளை பூரணமாக நிராகரிக்கும் சந்திரிகா...

சந்திரிகாவின் கட்டளைக்கு மட்டுமே கீழ்ப்படிந்து நிற்கும் ஆயுதப்படைகள்.

சந்திரிகாவை முன்வைத்து தமது பேரினவாத சிந்தனைகளுக்கும், அரசியல் அபிலாசைகளுக்கும் உத்வேகமளிக்க, அவருக்கு போதையையூட்டி வரும் பௌத்த - சிங்கள - பேரினவாத - உதிரித் தலைமை கள் எரிகிற வீட்டில் பிடிங்கியது லாபம் என நினைக் கும் சந்தர்ப்பவாத இடது சாரிக் கட்சிகளின் செயற்பாடுகளின்,

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்ற கொள்கையைக் கடைப் பிடிக்கும் ஜே.வி.பியினர்.

இவர்களுக்கிடையே எல்லாரும் சமாதானம் - அமைதி என்ற சொற்கள் இந்த நிலையில் தான் நாம் அண்மைக்கால சம்பவங்களை மதிப்பிடவேண்டியுள்ளது.


இன்று சமாதான நகர்வுகளுக்கான மிகப் பெரிய எதிரி சந்திரிகாவின் 'நிறைவேற்று அதிகார வலு' தான்.

அந்தவலு அகற்றப்படாத நிலை யில், அல்லது பறிக்கப்படாத நிலையில், சமாதானம் தொடர்பான எந்த முயற்சிகளும், வெறும் முயற்சிகளாகவே இருக்கும்.

இந்த 'அதிகார வலு' சந்திரிகாவிடம் இருந்தாலும் சரி ரணிலிடம் இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த சிங்கள அரசியல் வாதிகள் கையில் இருந்தாலும் சரி அது தமிழர்களுக்கான உரிமைகளை வழ ங்கும் மனோதர்மத்தை அவர் களுக்கு கொடுக்கவே மாட்டாது. இதனைத் தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள். ஏனெனில் இது வரலாறு அவர்களுக்கு உணர்த்தியுள்ள வலுவான அனுபவப்பாடம்.

இப்போது சந்திரி காவிடம் இருக்கும் 'அதிகாரம்' ரணிலை சமாதானம் பேசுவதற்கு அவரை அனுமதித்தாலும், தீர்வொன்றை எட்டுவதற்கு அவரை அனுமதிக்கவேமாட்டாது. அதிகாரம் கை மாறிப்போனாலும், ஒரு வரின் சமாதான முயற்சியை மற்றவர் எதிர்க்க வேண்டிய 'கடமையை' தொடர்பவராகவே அவர்களும் இருப்பர். இது சிறிலங்காவின் அரசியல் மரபு.

இந்தச் சூழ்நிலையில் சமாதானம் குறித்த ஆத்மார்த்தமான விருப்பற்ற நிலையில் அமைதி முயற்சிகள் எவ்வாறு சாத்தியமாகும்?




தாய்லாந்திலும், நோர்வேயிலும், ஜேர்மனியிலும்... பேச்சுவார்த்தைகளை ரணில் அரசு தொடர்கின்ற அதேவேளை யில், அது குறித் ! திருப்தி தெரிவிக்கின்ற அதே சமயத்தில், நாட்டின் வடக்கு, கிழக்கு மக்களின் துயர்கள் தொடர்கதையாக நீளுவதை அவரால் தடுக்கவே முடிய வில்லை.

தமது சொந்த மண்ணில், சொந்த வீடுகளில், இயல்பு வாழ்வை மீளத் தொடங்குவதற்கு அனுமதியளிக்க மறுத்து அச்சுறுத்தல் விடுக்கும் ஆக்கிரமிப்பு இராணு வம், மக்கள் வாழ்விடங்களை 'கபளீகரம்' செய்து உயர்பாதுகாப்பு வலயம் எனப் பெயர் சூட்டி உரிமைகோரி நிலைகொண் டுள்ளது.

உயர்பாது காப்பு வலயக் குடியேற் றம் எங்களின் உரிமைப் பிரச்சினை அதனை தீர்மானிக்க இந்தியர்கள், பிரிட்டிஷ்காரர்கள், தாமதித்த நிபுணர்கள் என யார் யாரையோ எல்லாம் அழைத்து ஆலோசனை கேட்கி றார்கள். எமது பெண் போராளிகள் இடைப் பட்டி கட்டக்கூடாதாம்...

நாளைக்கு காலணி அணியக் கூடாது என்றும் கூறக்கூடும். எமது கடற் பிராந்தியத்தில் சுயாதீனமாக நடமாட எமக்கு உரிமையில்லை. சிறிலங்கா கடற்படை யினரின் காடைத்தன அணுகுமுறைகள் சர்வதேசக் கடற்பரப்புவரை விஸ்தீரனமாகி யுள்ளதை கண்காணிப்புக் குழுவோ, சர்வதேச சமூகமோ, உடனடியாக கண்டிக் கும் திராணியற்றதாக, அரசபடைகளின் அட்டூளியங்களுக்கு மௌன அங்கீகாரம் வழங்குபவையாகவே உள்ளன.

ஆயுதப்படைகளின் அத்து மீறல்களை மூடிமறைக்க, சமாளிக்க, தீவிரம காட்டும் தென்பகுதி ஊடகங்கள், வடகிழக்கு பகுதியில் நடக்கும் சிறிய சிறிய சம்பவங்களையும் மிகைப்படுத்தி-அவற்றை விடுதலைப்புலிகளுடன் தொடப்புபடுத்தி-பிரசாரம் செய்வதிலும் முன்நின்று செயற்படுகின்றன.

இராணுவ அத்துமீறல்களை கடற்படையின் அட்டூளியங்களை வெளிப்படையாக கண்டி க்கவோ, ஒப்புக்கொள்ளவோ, அதனை நிறுத்துவதற்கு முயற்சி எடுக்கவோ திராணியற்றதாக பிரதமர் ரணில் தலைமையிலான அரசு செயலற் றுப்போயுள்ளது.

சந்திரிகாவின் சகலவித மான அபிலாசைகளையும் நிறை வேற்றத்த யாராக கைகட்டி, வாய்பொத்தி, தலை யசைக்கத் தயாராக இருக்கும், இராணு வத் தளபதி லயனல் பலகல்லேயும், கடற்படைத் தளபதி தயாசந்த கிரியும், சமாதான முயற்சிகளை நாசம் செய்யும் சந்திரிகாவின் சகல 'சதிகளுக்கும்' உடந்தை புரிபவர்களாகவே உள்ளனர்.

நெடுந்தீவுச் சம்பவங்கள்

மானிப்பாய்ச் சம்பவம்

சர்வதேசக் கடற்பரப்பில் அத்துமீறிச் சென்று உலகின் பொது விதிகளை உதாசீனம் செய்து விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பலைத் தகர்த்து பதினொரு போராளிகளைக் கொன் றொழித்த நிகழ்வு.

திருமலை-திரியாயில் விடுதலைப் புலிகளை சுற்றி வளைத்த கடற்படையினரின் புரிந் துணர்வு உடன்படிக்கை மீறல் நட வடிக்கை....

இவையும், இவை போன்ற ஏனையபலவும் சமாதா னத்தை நிராகரிக்கும், அல்லது அதனை ஏற்கமறுக்கும் சக்திகளின் கூட்டு நடவடிக்கைகளின் வெளிப்பா டேயாகும். சந்திரிகாவின் ஆசீர்வாதத்துடனும் அறிவுறுத்தலுடனும் தான் இவைகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன என்பதை அவரின் கட்சிகாரர்களே பகீரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ள நிலையில்.

ரணிலின் அரசாங்கம் அதனை தடுக்க வகை தெரியாது சமாளிக்க சமாதான சங்கீதத்தை உரத்து ஒலித்து கவனத்தை திசை திருப்பமுயல்கிறது. பாதுகாப்பு அமைச்சர் இரண்டும் கெட்ட ஒருவராக தினறுகிறார். பாதுகாப்புபடைகள் அவரது கட்டுப்பாட்டில் இல்லை. அவர்கள் அவருக்கு கட்டுப்படப்போவதில்லை. அவர் களை இயக்கும் மூலவிசை சந்திரி காவின் கையிலேயே உள்ளது.

ஆக சமாதானம் முக்கல் முன களுடன் தள்ளாடும் நிலையை இந்தச் சூழ்நிலைகள் நிர்ப்பந்தமாக ஏற்படுத்தி வருகின்றது.

கொழும்பில் பொ.ஐ முன்னணி-ஜே.வி.பி கூட்டாக நடத்திய அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி உண்மை யில் சமாதான நடவடிக்கைக்கு விடுக் கப்பட்ட பகிரங்க சவாலாகவே உள்ளது. இந்த மக்களை அணி திரட்டும் நடவ டிக்கைகள்

(15ம் பக்கம் பார்க்க...)

கவலைப் படுவதன் மூலம், உங்களில் ஒருவராவது ஒரு முழமேனும் உயர்ந்து விட முடியுமா? - இயேசு நாதர்

# சமாதானத்துக்கு எதிரான பிராந்திய வியூகம்?

நிலாந்தன்

கிழக்குக கடலில் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் இதுவரையிலுமான எல்லா யுத்தநிறுத்த மீறல்களிலும் பெரியது; பாரதூரமானது.

இதுவரையிலுமான எல்லா யுத்தநிறுத்த மீறல்களோடும் ஒப்பிடுகையில் இது அதிகம் யுத்தத்திற்குக் கிட்டவாய் வருகிறது.

இதையொரு உதிரிச் சம்பவமாகவோ அல்லது தற்செயலானது என்றோ எடுத்துக்கொள்ள முடியாது.

ஏனெனில் கடந்த சுமார் ஓராண்டு காலமாக சமாதானத்துக்கு வந்த சோதனைகளில் பாரதூரமானவை கடற்படைத் தரப்பிலிருந்தே வந்திருக்கின்றன.

கடல் பற்றிய விவகாரங்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் அதிகம் தெளிவாகவும் துலக்கமாகவும் கதைக்கப் படாதபடியால் தான் இது நிகழ்கிறது என்பதற்கில்லை.

மாறாக கடந்த ஓராண்டு காலமாக நிலவும் யுத்தநிறுத்தத்தில் இந்திய - சிறிலங்கா கடற்படைகளுக்கிடையிலான தகவல் பரிமாற்றமும் கூட்டுச் செயற்பாடுகளும் அதிகரித்து வரும் ஒரு பின்னணியில் வைத்தே இதைப் பார்க்கவேண்டியுள்ளது.

குறிப்பாக வங்கக் கடல் வழியூடாக நிகழும் போக்குவரத்துக்கள் பற்றிய தகவல் பரிமாற்ற வலைப்பின்னல் ஒன்று இருகடற்படைகளுக்குமிடையில் பலமடைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதான காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நுழையும் கடல் வழிகளை மறித்து பலமான ஒரு வேலியைப் போடுவதில் இரு கடற்படைகளும் நெருங்கி ஒத்துழைப்பது தெரிகிறது.

இப்படியொரு வேலியைப் போடுவதற்கு தனிய படைநடவடிக்கைகள் மட்டுமன்றி வேறுசில தந்திரமான மறைமுக வழிவகைகளையும் அவர்கள் கையாள்வது போலத்தோன்றுகின்றது.

அண்மைக் காலங்களில் இந்திய மீனவர்களின் வருகை பெருமெடுப்பில் நிகழத்தொடங்கியுள்ளதை இங்கே குறிப்பிடலாம்.

அவர்கள் கத்தி, வாள், பொல்லுகள் போன்ற ஆயுதங்களுடன் வருகிறார்கள். இது ஏதோ ஒரு மோதலை எதிர் பார்த்து வருவது போலிருக்கிறது.

அவர்களின் வருகையை இந்தியக் கடற்படையோ அல்லது சிறிலங்காக் கடற்படையோ தடுப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக சிறிலங்காக். கடற்படை நினைத்தால் இதை மிகவும் சுலபமாகத் தடுத்து நிறுத்த முடியும்.

ஆனால் இதுவிசயத்தில் அவர்கள் வேறு ஏதோ ஒரு திட்டத்துடன் இருப்பது போலத் தெரிகிறது.

மேலும் இந்த மீனவர்களுடன் ஈழத்து மீனவர்கள் மோத வேண்டிவரும் போது அதை இந்திய மீடியாக்கள் செய்தியாக்கும் விதத்திலும் அரசியல் உள்நோக்கங்கள் இருப்பது போலத் தெரிகிறது.

கடைசியாக நடந்த ஒரு மோதலைப்பற்றிய செய்தியொன்றில் மீனவர்கள் குண்டுவீசித் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இது இச்சம்பவங்களில் புலிகளுக்கும் சம்பந்தமிருக்கலாம் என்ற ஒரு ஐயத்தை இந்திய வெகுசனங்களின் மத்தியில் உருவாக்கும் உள்நோக்க முடையது. அதாவது இந்திய வெகுசனங்களுக்கும் புலிகளுக்குமிடையில் மேலும் பகையை வளர்ப்பது.

அதைவிட முக்கியமாக இந்திய மீனவர்களையும் ஈழத்து மீனவர்களையும் மோதவிடுவதன் மூலம் அவர்களை விரோதிகளாக்கி விட்டால் கடலில் இயல்பாகவே ஒரு தடுப்பு வலயம் உண்டாகிவிடும். கடற்படைகளுக்கு வேலை சுலபமாகிவிடும்.

இதெல்லாம் எதைக்காட்டுகின்றன என்றால் - இலங்கைத் தீவின் சமாதானத்துக்கு எதிராக ஒரு பிராந்திய வியூகம் பலமடைந்து வருகிறது என்பதே.

இதை வேறொரு விதமாகவும் நிரூபிக்கலாம். ஒரு தொண்




டர் நிறுவனத்தின் பிரதிநிதி சொன்னார் - இந்தியாவில் உள்ள சுமார் 65000 அகதிகளை திருப்பி அனுப்பும் விவகாரத்தில் இந்தியா வேண்டுமென்றே தாமதிப்பதாக.

இந்த அகதிகளைத் திருப்பி அனுப்பினால் மீளக்குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்குண்டாகும் என்றும் இது தவிர்க்கவியலாதபடி உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய சர்ச்சையை மேலும் சூடாக்கிவிடும் என்றும் அஞ்சுவதாலேயே புதுடில்லி இது விசயத்தில் இழுத்தடிப்பதாக ஒரு அபிப்பிராயம் சில வட்டாரங்களில் காணப்படுகிறது.



திரும்பிவரும் அகதிகளை வைத்து புலிகள் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு எதிரான அமுக்கத்தை அதிகரிக்க முடியும் என்று இந்தியா நம்புவதாலேயே இது என்று மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன .

அதேசமயம் சமீப காலங்களில் தமிழ் நாட்டி லிருந்து அகதிகள் கடல் வழி யாகத் தப்பிவரத் தொடங்கியுள்ளார்கள்.

இலங்கை இந்தியக் கடற்படையினரின் மிக இறுக்கமான கடல் வேலிகளைக் கடந்து இவர்கள் வருகிறார்கள்.

அதோடு இவர்களில் அதிகமானவர்கள் வன்னிப் பெரு நிலத்தை அல்லது மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது தற்செயலானதா அல்லது நன்கு திட்டமிடப் பட்ட ஒன்றா என்றும் யோசிக்க வேண்டியுள்ளது.

இது எதைக் காட்டுகிறது?

சமாதானத்தின் எதிரிகள் தீவுக்கு வெளியே குறிப்பாக பிராந்திய மட்டத்தில் நண்பர்களைத் தேடுவதில் வெற்றி பெற்று வருவதைத் தானே காட்டுகிறது.

அண்மையில் ரணிலும் மொறகொடவும் ஒருவர் பின் ஒருவராக இந்தியாவுக்கு போனதையும் இந்தப்பின்னணியில் வைத்தே விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதாவது சமாதானத்தின் எதிரிகள் பிராந்திய மட்டத்தில் பலமடைந்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையோடு மேற்கொள்ளப்பட்ட விஜயங்களே இவை.

சமாதானத்தின் எதிரிகள் பிராந்திய மட்டத்தில் உருவாக்கிவரும் அணிபலமடைந்து வருவதால் புதுடில்லியை சமாளிக்கவேண்டிய ஒரு கட்டாயம் ரணில் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருப்பதாக நம்ப இடமுண்டு.

மற்றது - யப்பானில் நடக்கவிருக்கும் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகள் குறித்து இந்தியா அதிகம் சந்தோசமாய் இல்லை என்பது தெரிந்ததே. இது பற்றி ஏற்கனவே யப்பானின் வெளிவிவகார அமைச்சரிடம் புதுடில்லி சுட்டிக்காட்டியிருந்தது.

இந்நிலையில் இந்தியாவை மீறி யப்பானில் நடக்கவிருக்கும் அடுத்தகட்டப் பேச்சுக்களுக்கு முன்பு இந்தியாவை சாந்தப்படுத்த வேண்டிய கட்டாயம் ரணில் அரசாங்கத்துக்கிருக்கிறது.

குறிப்பாக மொறகொட இந்தியாவுடன் உரையாடிய விவகாரங்களில் அனேகமானவை தமிழ்ப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்டவை என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும்.

ஒரு புறம் எதிர்க்கட்சிகள் சமாதானத்தைக் குழப்புவதற்கு இந்தியாவிடம் உதவி கேட்டு அலைகின்றன.

இன்னொருபுறம் அரசாங்கம் சமாதானத்துக்காக இந்தியாவிடம் ஆசீர்வாதம் கேட்டு அலைகிறது.

அண்மைக்காலங்களில் சிங்கள அரசியல் வாதிகள் கட்சி பேதமின்றி அதிகம் விஜயம் செய்த ஒரு நாடாக இந்தியா காணப்படுகிறது.

சமாதானத்தை வளர்ப்பதற்கும் இந்தியாவிடம் போகிறார்கள். சமாதானத்தை முறிப்பதற்கும் இந்தியாவிடம் தான் போகிறார்கள்.

இப்படிப் பார்த்தால் இலங்கைத் தீவின் சமாதானம் எனப்படுவது இந்தியாவுக்குப் புறத்தியான ஒன்றாக இருக்க முடியாது என்று சிங்களத் தலைவர்கள் நம்புவது தெரிகிறது.

ஆனால் யதார்த்தத்தில் சமாதான முயற்சிகள் இந்தியாவின் கைகளை மீறிப்போவதான நிலைமைகளே அதிகம் காணப்படுகின்றன.

அது மட்டுமல்ல அவை சந்திரிகாவின் கைகளையும் மீறிப் போகின்றன என்பதே மெய்நிலை.

சமீபத்தில் நடந்த ஒரு சந்திப்பில் சந்திரிகா ராவூப்ஹக்கீமிடம் தனிப்பட்ட முறையில் சில விசயங்களைக் கதைத்ததாகக் கூறப்படுகிறது. இதில் புலிகளை நம்பக்கூடாது என்ற விசயம் அதிகம் வற்புறுத்தப்பட்டதாம்.


இரண்டு சிறுபாண்மையினரையும் மோதவைத்தேனும் சமாதானத்தைப் பலியிடுவது என்று சந்திரிகா முடிவெடுத்து விட்டார்.

சமாதானம் தனது கையை மீறிப் போகத் தொடங்கிவிட்டது என்று அவர் அஞ்சுவதனாலேயே இப்படியொரு சூழ்ச்சியில் இறங்கியிருக்கலாம்.

இது விசயத்தில் அவருக்கு விசுவாசமான தளபதிகள் புலிகளைத் தொடர்ச்சியாச் சீண்டி வருகிறார்கள்.

இனியுமவர் இத்தகைய சூழ்ச்சிகளில் பிராந்தியத்தில் உள்ள சக்திகளையும் கூட்டுச்சேர்த்து பலப்பட்டு விடக்கூடாது என்பதனாலேயே ரணிலும் -மொறகொடவும் இந்தியாவுக்குப் போய்வருவதாக நம்ப இடமுண்டு.

இத்தகைய சூழ்ச்சிகள் எல்லாவற்றிலும் தப்பிப்பிழைத்து இலங்கைத்தீவின் சமாதானம் உயிர் தரித்திருக்குமாயிருந்தால் அது அனேகமாக இந்த ஆண்டின் அரசியல் அதிசயங்களில் ஒன்றாயிருக்கும்.




**செய்தி:- சிறிலங்கா கடற்படை அதிகாரிகள் குழு இந்தியா விஜயம். கூட்டுப்பயிற்சி குறித்து ஆராய்வார்கள்...**

*மயிலர்:- இந்தியா சிறிலங்கா கடற்படைக்கு பயிற்சி அளித்து தங்கடை மீனவர்களுக்கு இன்றுமதிக ஆபத்தையும், கஷ்டத்தைத்தான் கொடுக்கப் போகுது பாருங்கோ... உது பாம்புக்கு பால் வார்க்கிற கதையாத்தான் போகுது.... தமிழக மீனவர்கள் தான் பாவம்... கடற்படையோடு மட்டும் உறவு... மீனவர்களோடு என்றால்பகை... அவர்கள் தமிழக மீனவர்கள்... தமிழ் மீனவர்களெல்லே....*

**செய்தி:- ஜெனரல் ரத்வத்தை நீதிமன்றில் அழுதார். பிணைமனு நிராகரிக்கப்பட்டது.**

*மயிலர்:- எத்தனை தமிழ்க் குடும்பங்களை அழவைத்து ரசித்தவரெல்லே... நல்லா அழட்டும்.. எத்தனை தமிழ் இளைஞர்களை - அப்பாவிகளை சிறையில் அடைத்து, விசாரணைகளின்றி, பிணை மனுக்களை நிராகரித்து கைதிகளாக கலங்கவைத்தவரெல்லே.... கலங்கட்டும். அரசு அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும் எண்டது சரிதான் பாருங்கோ... எண்டாலும் இது நீலிக்கண்ணீராகக் கூட இருக்கலாம் பாருங்கோ...*

**செய்தி:- விடுதலைப்புலிகளின் பங்களிப்பில்லாத எந்த வொரு சமாதான முயற்சியும் வெற்றிதரப் போவதில்லை... ரணில் கூறுகிறார்...**

*மயிலர்:- ரணில் ஐயா எல்லாவற்றையும் விட முக்கிய விடயத்தை மறந்து பேசுகிறார் போலைகிடக்கு... என்னதான் விடுதலைப்புலிகள் முழுமூச்சாக ஒத்துழைத்தாலும், முப்படைகளும், முப்படைத்தளபதியும் அதுதான் சந்திரிகா அம்மையாரும் பங்களிப்பும் ஒத்துழைப்புமில்லாமல் சமாதானம் ஏற்படுமே.... குட்டிச்சாத்தான்களை சுற்றிவர வைச்சுக்கொண்டு கெட்டித்தனம் பேச முடியுமே.... சண்டிராணி சமாதானத்துக்கு சரிவரமாட்டார்பாருங்கோ....*

**செய்தி:- கிழக்குக் கடலில் நடமாடியது மீன்பிடி இழுவைப்படகு தான். ஆயுதக் கப்பலல்ல... கடற்படை வட்டாரங்கள் தெரிவிப்பு...**

*மயிலர்:- மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள் எங்கடை கடற்பரப்பிலை காகிதக்கப்பலைக் கண்டாலும் அதை ஆயுதக்கப்பல் எண்டு சொல்லி அறிக்கை விட ஆயிரம் பேர் இருக்கினம்... அயல்நாடு தகவல் தெரிவித்தால். அதை ஆராயாமலே அறிக்கை விடக்கடற்படை தயார்.. பிறகென்ன.... சொல்லுறதும் அவைதான். மறுக்கிறதும் அவைதான்...*

**செய்தி:- வெலிக்கடைச் சிறையில் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றம் ஊடாக நீதியைப் பெற முடியவில்லை - கைதிகள் விசனம்.**

*மயிலர்:- நீதி மன்றமே சிறைக்குள் இருக்கேக்கை, நீதி எப்பிடி சுதந்தரமாக செயற்பட முடியும்... பாருங்கோ... நீதிதேவதையை கண்களைக்கட்டி விட்டதுமல்லாமல் சிறைக்குள்ளையுமெல்லே தள்ளியிருக்கு சிறலங்கா அரசு. வழக்குத் தவணைகளை வேண்டுமேன்றே பிற்போடுவது அநீதியான விசயம் பாருங்கோ... தாமதிக்கும் நீதி மறுக்கப்படும் நீதியாகும்... சிறிலங்காவிலை நீதியென்பதெல்லாம் நிதிக்குள் முடக்கிக் கிடக்குது.*

# கைதிகளின் விடுதலை புலிகளின் நல்லெண்ணம்

**சிறி. இந்திரகுமார்**

விடுதலைப்புலிகளின காவலிலிருந்த இரண்டு படைக்கைதிகளை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் எந்தவித நிபந்தனைகளுமின்றி விடுவித்து சமாதானத்தின் மீது புலிகளுக்கிருக்கும் நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளார்.

யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் தலைவராக கடைமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற றொன்புருவ் ஹொவ்டே மற்றும் புதிய தலைவராகக் கடமையேற்றுள்ள ரெல்விசன் ஆகியோரிடமே இக்கைதிகளை புலிகள் ஒப்படைத்தனர்.

புலிகள் இதற்கு முன்னரும் பல யுத்தக் கைதிகளை விடுவித்துள்ளனர். அவை சமா தான நல்லெண்ணத்துடனும் மனிதாபிமான ரீதியிலும் இக்கைதிகள் விடுவிப்பு நடந்துள்ளது.

ஆனால் இம்முறை விடுவிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயும் பொலிஸ் கொன்ஸ்டபிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிற்கு அனுமதியின்றி நுழைந்ததனால் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட இரண்டு கைதிகளுமே தமிழீழ நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டிருந்தமை வழமையான கைதிகள் விடுவிப்பிலிருந்து மாறுபட்ட ஒரு நடவடிக்கையாக அமைந்திருந்தது.


ஏனெனில் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட கைதிகள் எவரும் தமிழீழ நீதிமன்றில் நிறுத்தப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு திருகோணமலையில் சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள ஆறு புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டால் மாத்திரமே இந்த இரண்டு படைக்கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என புலிகள் நிபந்தனை விதித்திருந்தனர். ஆனால் கைதிகளின் விடுவிப்பின் போது தமது நிபந்தனையை புலிகள் விடுத்து இரண்டு கைதிகளை எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுவித்திருந்தமை முக்கியம் பெறுகின்றது.

இந் நடவடிக்கையானது சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் புலிகளின் சமாதானம் மீதான விசுவாசத்தினை தெளிவுபடுத்தும் நம்பிக்கையின் அடிப்படையிலும் இடையூறுகள் எதுவுமின்றியும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய சமாதான நடவடிக்கைக்கு இடையூறாக இருக்கின்ற விடயங்கள் களையப்பட்டு சமாதான நடவடிக்கைகள் உண்மையானதாக நடந்தேறவேண்டும் என்பதைபுலிகள் இக்கைதிகள் விடுவிப்பு மூலம் பலமாகவே உணர்த்தியுள்ளனர்.


இன்னொரு வகையில் பதவியேற்கும் புதிய கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெல்விசன் அவர்களுக்கு தனது கடமையினை மேற்கொள்ள இலகுவாக புலிகள் தமது பக்க வாசலைத் திறந்து விட்டுள்ளார்கள்.

ஏனெனில் இந்த இரண்டு கைதிகளையும் விடுவிக்குமாறு பழைய கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றொன் புருவ் ஹொவ்டே கோரியிருந்தார். ஆனால் கைதிகள் விடுவிக்கப்படாததால் இப்பிரச்சினை இழுபறிநிலையிலிருந்தது.



ஆனால்தலைவர் பிரபாகரன் அவர்களுடனான சந்திப்பின் போது இக்கைதிகள் விடுப்பு நடந்தமை மூலம் ஓய்வு பெற்றுச் செல்லும் கண்காணிப்புக் குழுத் தலைவரை கௌரவப்படுத்திய அதேவேளை புதிய தலைவரிற்கு கண்காணிப்புப் பணிமீது ஒரு நம்பிக்கையினையும் ஊட்டியுள்ளனர்.

புலிகள் சமாதானத்தின் மீதான தமது உறுதியினை என்றும் வெளிப்படுத்தத் தவறியதில்லை ஆனால் புலிகளின் நடவடிக்கைகளை என்றுமே சமாதானத்தின் மீதான நல்லெண்ண நடவடிக்கைகளும் தென்னிலங்கை ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் வெளிப்படுத்தாது மாற்றுக் கருத்துருவாக்கங்களையே தோற்றுவிப்பதில் முன்னணியிலிருந்தனர்.



ஆனால் அரசதரப்பின் சார்பில் இலகுவாக கையாளப்பட வேண்டிய விடயங்களை சமாதானத்தின் மீதான தமது நம்பிக்கையினை வெளிப்படுத்த வேண்டியவர்கள் அவற்றை வெளிப்படுத்தாது சனாதிபதியின்பக்கமும் சட்ட சிக்கல்கள் எனவும் காலம் கடத்தி சமாதானத்தின் மீதான தமது பிடியினை வெளிப்படுத்தத் தவறியே வந்துள்ளனர்.

இந்த வகையிலேயே கைது செய்யப்பட்ட ஆறு புலிகள் இன்னமும் விடுவிக்கப்படாது இழுத்தடிக்கப்டுவதும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வாளும் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தினை கையாள்வதும் தொடர்கின்றது.

உண்மையான சமாதானம் தோற்றுவிக்கப்பட வேண்டுமானால் நல்லெண்ண சமிஞ்சைகள் சம்மந்தப்பட்ட இரண்டு தரப்பிலிருந்துமே வெளிவர வேண்டும்.

அதேவேளை கண்காணிப்புக் குழு இத்தகைய நடவடிக்கைகளை இரண்டு தரப்பிலும் தோன்ற ஊக்குவிக்க வேண்டும். மாறாக தனித்து புலிகளிடமிருந்து மட்டும் எதிர்பார்ப்பது பொருத்தமானதாக இருக்காது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து சமாதானத்தின் தோற்றுவிப்பிற்காக புலிகள் அதிகவிலையினையும் அதிகம் விட்டுக் கொடுப்புகளையும் மேற்கொண்டுள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

சமாதான பேச்சுவார்த்தைக்கான கரு உருப்பெற்ற காலத்தின் போது களத்தில் புலிகளின் கைகளே ஓங்கியிருந்தது. அதேவேளை பேரம் பேசும் சக்தியாக புலிகளே இருந்தனர் என்பதும் இவற்றை நன்கு உணர்த்தும்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக புலிகள் சமாதானத்தின் மீது தமது நம்பிக்கையினை வெளிப்படுத்திக்கொண்டிருக் கட்டும் என எதிர்பார்க்கப்பட்டால் சமாதானத்தை தோற்றுவிப்பதற்காகபாடுபடும் அனைவரும் தமது இலக்கை எட்ட முடியாதவர்களாகவே போவார்கள். ■■

---




# அஞ்சாமை

யாழ ஆயராக இருந்து தற்பொழுது ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கும் கலாநிதி மேதகு ஆயர். வ.தியோகுப்பிள்ளை அவர்கள் உண்மையிலே ஒரு பிடிச்சுராவி. உடல் தளர்ந்து நோய் வாய்ப்பட்டிருந்தாலும் இன்றைக்கும் அவரது குரல் சிம்மகர்ச்சனைதான்.

"யாழ்ப்பாண மக்கள் பனை மரம் போன்றவர்கள்" என்பது அவர் கருத்து. கோடையாயினும்சரி, மாரியாயினும் சரி பனைமரம் நிமிர்ந்து நிற்கும். அதிலும் கோடையில் தான் தாகம் தீர்க்கும் குளிர்மையான கள் அதிகமாகச் சுரக்கும். மரத்தின் அனைத்துப் பாகங்களும் ஏதோ ஒரு விதத்தில் பயன்கொடுக்கும். எந்தச் சூழ்நிலையிலும் தளராது சூழலுக்கு ஏற்ப வளர்ந்து வாழும் யாழ்ப்பாண மக்களுக்கு இக்கற்பகத்தருவை ஒப்பிட்டது மிகப்பொருத்தமானதே.

அவருடைய பதவிக் காலத்தில் யாழ் ஆயர் இல்லத்தில் அத்துமீறிப் புகுந்த அடாவடிகளுக்கும், விழுந்து வெடித்த எறிகணைகளுக்கும் ஈடுகொடுத்தவர். அவரது பணியாள் ஒருவர் எறிகணையால் படுகாயப்பட்ட பொழுதும் கூட ஆயர் இல்லத்தை விட்டு வெளியேறாது அங்கேயே வாழ்ந்தவர்.

1995 ஒக்டோபரில் யாழகத்தை விட்டு மக்கள் இடம் பெயர்ந்த போது யாழ்ப்பாணம் மடுத்தீனார் குருமடத்தில் ஒரு அறையில் அவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவராக வாழ்ந்து கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தை விட்டு பொதுமக்கள், துறவிகள் அனைவரும் வெளியேறும் போது அவரையும் வெளியேறும் படி பலரும் அழைத்தனர். ஆனால் அவரோ. "நீங்கள் வயதில் இளையவர்கள் வெளியேறுங்கள்.நான் கிழவன் இருபத்தைந்து ஆண்டுகளாக ஆயராக வாழ்ந்து இதன் வளர்ச்சியைக் கண்டவன். இப்பொழுது என்கண் முன்னாலேயே இதன் அழிவையும் காண்கிறோன்" என்று கூறிவெளியேற மறுத்துவிட்டார். அவருக்குத் துணையாக அமுதகவிப் புலவர் யாழ் ஜெயம் அவர்களும், குடும்பத்தினரும் கூடவே இருந்தனர்.

அவர் இருந்த குருமடத்தின் வளவினுக்குள் எறிகணைகள் வந்து விழுந்து வெடிக்கும். அதனால் குருமடத்துக்குச் சொந்தமான மாடுகள் கூட இறந்தன. கூடவே இருந்தவர்கள் மறைவிடங்களைத் தேடி பாதுகாப்பாக ஒதுங்கிக் கொள்வர். தியோகுப் பிள்ளை அவர்கள் மட்டும் கையில் ஜெபமாலையுடன் குருமடத்தின் வாசலில் ஜெபித்தபடி உலவிக் கொண்டு திரிவார். மற்றவர்கள் அழைத்த போதும் கேட்கமாட்டார்.

புலிகளின் கோட்டையைக் கைப்பற்றிவிட்டதாகப் பெருமை அடித்து மருமகள் மகாராணிக்கு ஓலை அனுப்பிய மாமாத்தளபதியின் இராணுவம் யாழ்ப்பாணத்துள் புகுந்த பின்னர். இராணுவச் சிப்பாய்கள் சில் மேஜர் ஒருவரின் தலைமையில் புனித மடுத்தீனார் குருமடத்துள் பிரவேசித்தனர்.

அவர்கள் பிரவேசித்த வேளையில் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் தனது அறையின் வாசலுக்கண்மையில் நாற்காலியில் இருந்து கொண்டு நூல் ஒன்றினைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் அந்தவேளை ஆயருக்குரிய சீருடையிலோ, குருக்களுக்குரிய அங்கியுடனோ இருக்கவில்லை. சாதாரணமான சாரமும் பைகாமா மேற்சட்டையும் மட்டுமே அணிந்திருந்தார். இராணுவத்தினர் அவரை நோக்கி வருவதை அவர் கவனிக்கத் தவறவில்லை. அப்படியிருந்தும் புத்தகத்தைப் படிப்பது போன்ற பாவனையில் இருந்தார். அவருடைய கைத்தடி பக்கத்திலேயே இருந்தது.

வந்த சிப்பாய்கள் அவரை யாரோ ஒரு கிழம் இருக்கிறது என்று கருதியவராகக் கேட்டுக் கேள்வியின்றி அவரது அறையினுள் பிரவேசிக்க முயன்றனர். இது கண்ட ஆயர் அடுத்த கணம் தனது கைத்தடியை எடுத்து நீட்டி மறித்தவராக "Getout" என்று அவருக்கே உரித்தான சிம்மக் குரலில் கர்ச்சித்தார். வந்தவர்கள் திகைத்தே போனார்கள்.

யார் இந்த மனிதன்? என்று அவர்கள் இனங்கான முயற்சித்த வேளை அவர்களுள் மேஜராக வந்தவன் ஆயரின் விரலில் இருந்த முத்திரை மேதிரத்தைக் கண்டு கொண்டார். அவர் கத்தோலிக்கனாக இருக்கவேண்டும். அவர் ஆயர் என்பதை மற்றவர்களுக்கு விளக்கிக் கூறி அவ்விடத்தைவிட்டு அகன்றான். பின்னர் அவர்தான் முன்னைநாள் யாழ் ஆயர் வ.தியோகுப்பிள்ளை என்பதை விசாரித்து அறிந்து கொண்டனர்.

தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ் விட்டு வெளியேறவில்லை. புனித மடுத்தீனார் குருமடத்தில் தான் இருக்கிறார் என்ற செய்தி பலாலிக்கு பறந்து மறுநாள் பலாலியிலிருந்து இரண்டு உயர் அதிகாரிகள் ஆயரைக் காணவந்தனர். குரு முதல்வர் இத்தகவலை ஆயரிடம் தெரிவித்தார். உள்ளூர ஆயருக்கு அவர்களைச் சந்திப்பது விருப்பமில்லையாயினும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

அவர்களைச் சந்திக்கும் வேளையில் ஆயருக்குரிய சீருடையை அணிந்து கொள்ளும்படி குருமுதல்வர் கேட்டுக் கொண்ட போது அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. வளக்கமாக வீட்டுக்கு அணியும் அதே உடையிலேயே இருந்தார்.

இராணுவ அதிகாரிகள் வந்தனர். வணக்கம் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தைத் தாம் கைப்பற்றி விட்டதாகவும் இனிப்பிரச்சினை எதுவும் இல்லை நாட்டை மீளக் கட்டி அமைப்பதே தமது கடமை. இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். என நீங்கள் நினைக்கிறீர்கள் என்றெல்லாம் அவ்வதிகாரிகள் அடுக்கிக் கொண்டேபோயினர்.

ஆயர் அனைத்தையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கவே அவர்கள் மிக உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் ஆயரின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்கனர்.

இறுதியில் ஆயர் வாய் திறந்தார். வெடிகுண்டுகள் போல் அவரது சிம்மக் குரலில் வார்த்தைகள் வெளிவந்தன "MAKE TAMIL AS OF FICIAL LANGUAGE FIRST" தமிழை மதலில் அரசகரும மொழி யாக்குங்கள். பின்னர் என்ன செய் வது என்பதைப் பற்றி யோசிக்கலாம்.

இந்த வார்த்தைகளைக் கூறி முடித்த மறுகணம் ஆயர் அவர்கள் இருக்கையை விட்டு எழுந்து அறைக்குள் நுழைந்து அதன் கதவை 'படார்' என அடித்து மூடினார். அது அவர்களின் முகத்தில் ஓங்கி அறைந்தது போல் இருந்தது.

அங்கிருந்த மற்றவர்களின் முகங்களில் ஈயாடவில்லை.பெரும் எதிபார்ப்புகளுடன் வந்த இராணுவ அதிகாரிகளின் முகங்களில் அசடு வழிந்தது.

**நாவண்ணன**

அண்மைக்காலத்தில் செய்திகளில் அதிகம்-அடிக்கடி அடிபடும் பெயராக ஜோன்அமரதுங்கவின் பெயர் இருக்கிறது. அமைச்சர் ஜோன்அமரதுங் கவைத்தான் கூறுகிறேன்.

மீண்டும் தூக்குத் தண்டனை முறையை அமுல் நடத்தியே தீருவது என்று கங்கணம்கட்டிக் கொண்டும் இரண்டு லட்சம் ரூபாய்க்கு தூக்குக் கயிறு வாங்கவும் கொள்வனவு உத்தரவு வழங்கி விட்டுள்ள நிலையில், இந்தக் காட்டு மிராண்டித்தனமான- அநாகரிகமான தண்டனை முறைக்குப் பலமுனைகளில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள வேளையில், தூக்குத் தண்டனை முறைக்கு பதிலாக

# மரணதண்டனையை வலியுறுத்தும் அமைச்சர் அமரதுங்காவுக்கு...

வேறு மாற்று மரணதண்டனை முறையை பரிசீலிப்பதில் தீவிரமாக இயங்கி வருவதன் மூலம் தன்னைப் பிரபலப்படுத்திவருகின்றார் என இவர் மீது முன்னர்- சில மாதங்களின் முன்னர்- நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டு வரப்பட்டது. எனினும் வாக்கெடுப்பில் தப்பித்துக் கொண்டு பதவியையும் தக்கவைத்திருப்பவர்.

அவ்வப்போது அதிரடி அறிக்கைகளையும் விடுவதில் வல்லவர்.

இப்போது நீண்டகாலமாக சிறைகளில் விசாரணைகள் எதுவுமின்றி கறுப்புச் சட்டங்களைப் பயன்படுத்தி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் அரசியல் லாபங்களைக் கருத்தில் கொண்டு, கைது செய்யப்பட்டு அநீதியான முறையில் அடைக்கப்பட்டுள்ள அப்பாவித்தமிழர்கள், மீண்டும் நீதிகோரி, விடுதலைகோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளது குறித்தும் தன் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஒரு மூன்றாந்தர அரசியல்வாதிக்குரிய- உணர்ச்சியற்ற மொழியில் மிகவும் அலட்சியமாக, உண்ணாவிரதம் பிரச்சினைகளுக்கு தீர்வாக முடியாது என்று அவர் கூறியுள்ளமையானது ஓர் அர்த்தமற்ற கூற்றாகவே உள்ளது.

உள்துறை அமைச்சராக இருக்கும் இவர் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு காட்டும் தீவிரத்தை நிரபராதிகளுக்கு விடுதலை வாங்கிக் கொடுப்பதிலும் காட்டியிருந்திருப்பாரேயானால் கைதிகள் உண்ணா விரதிகளாகி உயிரைப் போக்க போராட்டம் நடத்த வேண்டிவந்திருக்காது.

அவர்கள் போராட்டம் தொடங்கினால் தான் இவர்களுக்கு அந்த அப்பாவிகளின் நினைவாகவே வருகிறது.

'களுத்துறை சிறைச்சாலைக் கைதிகளின் விவகாரத்தை யாதார்த்த பூர்வமாக அணுகவேண்டுமாம்... இது தொடர்பாக சட்டமா அதிபருடன் தொடர்பு கொள்ளப் போகின்றாராம்...'

இவ்வளவு காலமும் இதனைப்பற்றிச் சிந்திக்க அமைச்சருக்கு நேரமில்லாமல் போய் விட்டது ஏன்?

'சிறைச்சாலைகளுக்கு தான் பொறுப்பாக இருந்தாலும், சட்ட நடவடிக்கைகளுக்குத் தான் பொறுப்பேற்க முடியாது' என்று இதற்கு காரணத்தையும் அவர் கூறுகிறார்.

கைதிகள் கேட்பதெல்லாம் விசாரணையை துரிதப்படுத்தி குற்றத்தை நிரூபித்தால் தண்டனை தாருங்கள் இல்லையேல் விடுதலை தாருங்கள் என்பது மட்டுமே.

படுகொலைகள் பலவற்றில் சம்பந்தப்பட்ட தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்குக் கூட பிணையில் விடுதலை வழங்கி, சாதாரண சட்டங்களின் கீழ் வழக்கையும் நடத்தும் அரசு தமிழ் மக்கள் மீதான வழக்குகளுக்கு மட்டும் கறுப்புச் சட்டத்தை காரணம் காட்டுகிறது. பிணைவிடுதலையையும் நிராகரிக்கிறது.

இது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் குற்றமாகும்.

இந்த அப்பாவிகளின் அவலத்திற்கு காரணமான அனைத்து அரசியல் வாதிகளும் மன்னிக்கவே முடியாத மனிதகுல விரோதிகள் தான்......

ஒருவேளை இவர்களுக்கு மரணதண்டனை வழங்கத்தான் அமைச்சர் தூக்குக் கயிறுகளுக்கு கொள்வனவுக் கட்டளை பிறப்பித்திருக்கிறாரோ...? அப்படியானால் அமைச்சரைப் பாராட்டலாம் தான்....!?

# கடற்படையின் கட்டு மீறலும் கையாலாகாத ரணில் அரசும்

நெடுந்தீவுப் பிரச்சினை ஒரு நீண்ட தீராத பிரச்சினையாகவே உள்ளது. சிறிலங்காவின் ஆளும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு நெடுந்தீவில் கடற்படையினரதும் அவர்களின் எடுபிடிகளாக விளங்கும் ஈ.பி.டி.பினரதும் அட்டகாசத்தை, புரிந்துணர்வு உடன்ப டிக்கைமீறல் செயற்பாடுகளை, கட்டுப்படுத்த இயலாதகையறு நிலையில் இருப்பதை அண்மைக்காலச் சம்பவங்கள் தெளிவுபடுத்தி வருகின்றன.

தெளிவாகச் சொல்வதானால் கடற்படைத்தளபதி தயாசந்தகிரி சந்திரி காவின் பூரண ஆசீர்வாதத்திற்கும், அங்கீகாரத்திற்கும் உள்ளான ஒருவராக இருப்பதால் அவரால் அரசின் அபிலாசைகளை ஏற்கவோ, பாதுகாப்பு அமைச் சின் உத்தரவுகளை முழுமையாக மதிக்கவோ முடியாதவராக முப்படைத் தளபதியின் தலையசைப்புக்கு ஏற்ப இயங்கும் ஒருவராக இருப்பதால், ரணிலின் அரசால் கடற்படையை அதன் அடாவடித்தனங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலாது உள்ளது என்றே கூற வேண்டும்.

நெடுந்தீவு பிரதேசசபைக் கட்டடத்திற்குள் அத்துமீறிச் சென்று கடற்படையினர் அங்கு முகாமிட்டுள்ளனர். இதனால் சபையை இயக்க முடியாதுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாணசபை ஆளுநருக்கு யாழ் உள்ளூராட்சித் திணைக்களம் முறையிட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரே இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் முகாமமைப்பு வேலையும் நிகழ்ந்துள்ளது. இந்த உடன்படிக்கை மீறலை கண்டிக்கவோ, சம்பந்தப்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்கவோ அரசால் முடியவில்லை... ஏனென்றால் கடற்படையினர் அவர்களின் கட்டுப்பாட்டினுள் இல்லை.

அவர்கள் சுயேட்சையாகவே இயங்குகின்றனர் என்பதை அவர்களின் நடவடிக்கைகளே நிரூபித்து வருகின்றது.

இதேவேளை அதே நெடுந்தீவில் மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் புதிய காவலரண்களை அமைப்பதில் அதே கடற்படையினர் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

இதுவும் போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் நடவடிக்கையே.....

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இது தொடர்பாக எதுவும் 'காட்டமாக' நடவடிக்கையை எடுப்பதாகத் தெரியவில்லை.

பனைமரங்களை இதற்கென பெருமளவில் படையினர் தறித்து வீழ்த்தி வருகின்றனர்.

ஆளுக்கொரு பலாக்கன்று நடுவதை ஒரு தீவிர இயக்கமாகவே நடத்தும் சிறிலங்கா அரசு வடக்கு-கிழக்கில் ஆளுக்கு பத்து பனை மரங்களை இராணுவத்தினர் தறித்து வீழ்த்துவதை கைகட்டி, கண்மூடி, மௌனம் காத்து, அங்கீகரிக்கிறது.

அமைச்சர் மிலிந்தமொறகொட அண்மையில் நெடுந்தீவு சென்று நிலைமைகளை கண்காணித்து சென்றாராம்... செய்திகள் கூறுகின்றன.

யார் வந்து போயென்ன... அவர்களின் ஆட்கள், அவர்களின் ஆட்சி... பாவம் மக்கள்.... ஏனென்றால் அவர்கள் தமிழர்கள்....

'சமாதானத்தின் பலனை தமிழ் மக்கள் பூரணமாக அனுபவிக்கவில்லை எனப்புலிகள் கூறுவதில் உண்மையுள்ளது' என்று இந்தியாவில் வைத்து ரணில் கூறியிருக்கிறார்.

இந்த ஒப்புதல் மட்டும் ஒரு போதும் சமாதானத்தின் சுதந்திரக்காற்றை தமிழ்மக்களையென்ன- சாதாரணமாக நெடுந்தீவு மக்களைக்கூட சுவாசிக்க வைத்து விடாது என்பதை ரணில் உணர்வாரா?

நெடுந்தீவு மக்களின் நெடுமூச்சாகவே அந்தக்கடல் தொடர்ந்து இரைந்து கொண்டிருக்கிறது.

# நறுக்கென...



# சாத்தான் மீண்டும் வேதம் ஓதுகிறது

'யுத்தம் மூலம் தீர்வு கிடையாது; விடுதலைப்புலிகளுடன் பேசுவதுதான் ஒரே வழி'-இப்படி ரணில்விக் கிரமசிங்கா பேசியிருப்பாரேயானால் அது ஒரு செய்தியுமல்ல. அது குறித்து ஆச்சரியப்படவும் எதுவுமில்லை. ஆனால் பேசியிருப்பவரோ நிறைவேற்று அதிகார பலத்தை வைத்துக்கொண்டே சமாதான நகர்வினையும் அதில் ஈடுபட்டுள்ள ரணிலின் அரசையும் அன்றாடம் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சிறிலங்கா சனாதிபயேதான் என அறியும் போது தான் அதிர்ச்சியாக இருக்கிறது.

'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற தனது ஆட்சிக்காலக் கோட்பாட்டினை எப்போது அவர் கைவிட்டார்?

சிறிலங்காவில் இருப்பது இனப்பிரச்சினையல்ல. பயங்கரவாதப் பிரச்சினை தான் என உலகம் பூரா திக்விஜயம் செய்து பிரகடனம் செய்தவர் இப்போது இங்குள்ள பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்க்கக்கூடிய அரசியல்பிரச்சினைதான் என திடீரெனப் பேசுமளவிற்கு ஒரு மனமாற்றம் அவருக்கு ஏற்பட்டிருப்பது தான் அதிர்ச்சியைத் தருவதாக மட்டுமல்ல சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

ஒரு வாரத்திற்கு முன்னர் கூட ரணில் தன்னிச்சையாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுகிறார். இது குறித்து எனக்கு எதுவும் அறிவிப்பதோ கலந்துரையாடுவதோ, விபரிப்பதோ கூடக் கிடையாது. இந்தச் சமாதான நகர்வுகள் நாட்டைப்பிரிக்கும் திட்டத்துடன் விடுதலைப்புலிகளுக்கு அனுசரணையாகவே மேற்கொள்ளப்படுகிறது.... இந்த வகையில் இத்தகைய நடவடிக்கைகள் தொடருமானால் எனது அதியுச்ச அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டிவரும் என்றெல்லாம் மிரட்டல் அறிக்கையை விடுத்த சந்திரிக்காவோ மலேசியாவில் போய் நின்று கொண்டு அணிசேரா நாடுகளின் மாநாட்டில் -

'நாடு இனி யுத்தத்திற்கு செல்லமுடியாது... சமாதான முயற்சிகள் ஆபத்தானது என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அந்தப் பாதையில் செல்லத் தீர்மானித்து விட்டோம். இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாகாது என்ற நம்பிக்கையில் தான் பேச்சுவார்த்தைகளில் இறங்கியுள்ளோம்' என பன்மைத் தொனியில் கூறியுள்ளமைதான் அதிர்ச்சியாக உள்ளது.

'எப்போது இவர் ஆளும் ரணிலின் ஐ.தே.முன்னணி அரசுடன் இணைந்து ஒன்றாக சமாதானப் பாதையில் இறங்கி நடக்க ஆரம்பித்தாராம்?

ரணிலின் ஆட்சியை விரைவில் கலைப்போம் என்ற தொனியில் தானே அம்மையாரின் அருமைச்சகோதரரும், அவரது அரசியல் ஆலோசகரும், உள் வட்டத்தைச் சேர்ந்த மங்கள சமரவீர போன்ற அவரது மெய்யடியார்களும் கடந்தவாரம் வரை கூறிவந்தார்கள். ஆனால் சந்திரிகாவோ அவற்றையெல்லாம் மறந்தவராய் மலேசியா சென்றதும் சமாதான சங்கீதம் பாட ஆரம்பித்துள்ளார்.

எல்லாவற்றிலும் உச்சமாக 'தமது கட்சிக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கிறகாரணிகள் கூட யுத்தத்தாலும், இராணுவ ரீதியாகவும் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதை ஏற்றுக் கொண்டிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது' என்று கூறியுள்ளது தலையைச் சுற்றவைப்பதாக உள்ளது.

முப்படைகளின் தளபதி.. இராணுவத்தளபதியையும் கடற்படைத் தளபதியையும் தனது விரலசைவில் ஆட்டிப் படைத்து அமைதிக்கு எதிராக அவர் களை இயங்கவைத்து மறைமுகமாக சமாதான சூழலைக் குழப்ப முயல்கிறார் எனப்பரவலாக குற்றம் சாட்டப்படும் சந்திரிகா இப்படிக் கூறுவதென்றால்...

சமாதானம் குறித்து பிரதமருக்கு ஆலோசனை வழங்குகிறாராம்....

அவர்கள் விடும் தவறுகளை திருத்துகிறாராம்...

பேச்சுக்கள் தொடர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறாராம்...

என்ன மிஸ்டர் ரணில் விக்கிரமசிங்க.... இதெல்லாம் உண்மைதானா? அல்லது உங்களுக்கும் தலையைச் சுற்றுகிறதா?

**செங்குட்டுவன்**

நாம் கேட்பதைவிட, பார்ப்பதில் தான் நமக்கு நம்பிக்கை உண்டாகிறது. - ஹெரோடோட்டஸ்

# நாவலிலிருந்து சினிமாவாக நாஞ்சில் நாடானிலிருந்து தங்கர்பச்சான் ஊடாக

# சொல்ல மறந்த கதை

'சொல்ல மறந்த கதை' தங்கர் பச்சானின் இரண்டாவது படம். முதல் படம் அழகி. (சினிமாவை நாங்கள் வெறுமனே 'படம்' என்றே கருதி அதன் உயிர்ப்புத்தன்மையையும் கலையின் சாரத்தையும் விளங்காது புறக்கணித்து




விட்டோம்.) தங்கர் பச்சான் தன்னுடைய 'கல்வெட்டு' சிறுகதையை 'அழகி' யாக்கியிருந்தார். இப்பொழுது நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' நாவலை 'சொல்ல மறந்த கதை' யாக்கியிருக்கிறார்.


பதினேழு வருடங்களுக்கு முதல் 'தலைகீழ் விகிதங்கள்' வெளிவந்த போது அது பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. நாஞ்சில் நாடனின் எழுத்துச் சிறப்பையும் அடையாளப்படுத்தியது.

நாவல்காட்டிய கதைப்புலம், மனிதர்கள், அந்த மனிதர்களின் வாழ்க்கை, அவர்களின் மனவுலகம், அவர்களுடைய இயல்புகள், உணர்ச்சிப் போராட்டங்கள் என்பவற்றையெல்லாம் அறிமுகப்படுத்தி வாசகத்தளத்தில் அனுபவப்பதிவாகியது. அப்போது வாசகஉணர்தளத்தில் பதிவாகியவை அல்லது பகிரப்பட்டவை இப்பொழுது சினிமா என்கிற பார்வையூடகத்தின் வழி பதியப்படுகின்றது; பகிரப்படுகின்றது.

'சொல்ல மறந்த கதை' தமிழ் நாட்டின் தென் பகுதி விவசாயக்குடும்பம் அல்லது விவசாயக் கூலிக் குடும்பத்திலிருந்து படித்து வெளிவரும் இன்றைய இளைஞன் பொதுவாகச் சந்திக்கும் பிரச்சினைகளைச் சுற்றி நிகழும் கதையைச் சொல்கிறது.

ஏழைக்குடும்பத்தின் எதிர்கால நம்பிக்கையாகவும் அவர்களுடைய கனவாகவும் படித்து வெளியே வரும் குடும்பத்தின் மூத்த மகன் வசதிகள் படைத்த மேல்வர்க்கக் குடும்பமொன்றினால் எப்படிச் சுவீகரிக்கப்படுகிறான் என்பதனைக் காட்டுகிறது. இந்தச் சுவீகாரம் என்பது நாகரீகமான தந்திரோபாயமாக நிகழ்கிறது. படித்து விட்டு வேலைவாய்ப்புக்காக





காத்திருக்கும் இந்த இளைஞன் வேலை கிடைக்கும் வரை சந்தையில் வியாபாரம் செய்யவருகின்றான். தான் சந்தைக்குக் கொண்டுவரும் பலாப்பழத்தையே சுயமாக விற்கமுடியாத, சந்தையில் நிலவும் நிலையை வென்று விடுகிறான். இது அவனுடைய சாமர்த்தியத்தையும் திறமையையும் காட்டுகிறது. இதை மேல்வர்க்கப் பிரதிநிதியாகிய முதலாளி பார்த்து விடுகிறார். அவனை விசாரித்து தனது பெண்ணுக்கு மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்கிறார் - இல்லை எடுத்துக் கொள்கிறார்.

இப்படி இவர் எடுத்துக் கொள்வது அல்லது சுவீகாரம் எடுப்பது என்பது அந்த ஏழைக்குடும்பத்தின் எதிர் காலத்தை அவர்களின் கனவை எடுப்பதற்குச் சமமாகிறது.

குடும்பத்தின்மூத்த மகன் இந்த நிலைமைகளில் எப்படியான 'ஆய்க்கினை'க் குள்ளாகின்றான் என்பதை இங்கே நாம் பார்க்க முடியும். இது நமது அனுபவங்களையும் நமது சூழலிலுள்ள வாழ்க்கை அமைப்பு முறையையும் மீள் கண்ணோட்டம் செய்யத் தூண்டுகிறது.

சொல்ல மறந்த கதை குறிப்பிட்டுப் பேசக்கூடிய ஒரு சினிமா என்ற தன்மையைக் கொண்டிருப்பதால் அது வெளிப்படுத்தும் வேறு பரிமாணங்களும் நிறையவுண்டு.

ஆனாலும் முன்சொல்லப் பட்ட மையக்கதையையே நமது வாழ்க்கை நிகழும் யதார்த்தப் புலத்தில் வைத்து வெளிப்படுத்தியிருக்கிறார் தங்கர். சொல்ல மறந்தகதை ஒரு யதார்த்தச்சினிமா அல்லத்தான் என்றாலும் அதன் மைய உணர்த்துகை என்பது பெரும்பாலும் யதார்த்தத்துடன் தானிருக்கிறது.

சொல்ல மறந்த கதையைப் போன்ற கதைகளையுடைய வேறு சினிமாக்கள் முன்பும் வந்திருக்கின்றனதான். ஆனாலவை யதார்த்தத்துக்கப்பாலான மிகைபுனைவுச் சஞ்சரிப்புகளில் சிக்கியவை, மிதந்தவை.

இதில் வரும் இளைஞன் சராசரியானவனாக, நடைமுறை சார்ந்து இயங்குகிறவனாக இருக்கிறான். இதுதான் நமது கரிசனையைக் கூடுதலாகக் குவிக்கிறது இங்கே.

தன்னுடைய படிப்பாலோ திருமணத்தாலோ தனது குடும்பம் முன்னேறி விடவில்லை என்ற ஆதங்கமும் கவலையும் அவனை ஆட்டிப்படைக்கிறது. தன் குடும்பத்துக்கு உதவ முடியாத நிலையில் மாமனாருடைய இறுக்கங்களுக்கும் அந்த வர்க்க வாழ்க்கை அமைப்பும் இருக்கிறது. தன்னுணர்வுக்கும் சுய இயக்கத்துக்கும் சவாலான நிலை உருவாகும் போது அதிலிருந்து மீற முனைகிறான். அப்போது மாமனாரின் இறுக்கம் இன்னும் அதிகமாகி எல்லை மீறிவிடுகிறது. இறுதியில் அவனை வெளியே தள்ளி முகத்தில் உமிழ்ந்தும் விடுகிறார்.

இங்கேதான் தங்கர் பச்சான் நிதானமாக இருந்துள்ளார். உடனே அவன் மாமனாரைப் பழிவாங்கி, அவருக்குப் பாடம் புகட்டி, அவரைத்தன் காலடியில் கொண்டுவரும் சாகஸங்களைச் செய்யவில்லை. வெறும் புனைவாகவில்லை.

நடைமுறை வாழ்வில் எப்படி நமது நடத்தையும் அணுகுமுறையும் இருக்குமோ அதனைப்போல அதனை அவன் கைக்கொள்கிறான். அந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டு தன் மனைவிக்காகவும் குழந்தைக்காகவும் ஏங்குகிறான். இவ்வளவுக்கும் தந்தையின் நியாயமறுப்பை மீறி அவளோ அவளின் குடும்பத்தவர் எவருமோ நகரத்துணியவில்லை. இந்த நிலையிலும் அதாவது தான் தனியனாகியபோதும் தனது இயல்பிலிருந்து அவன் விலகவில்லை. எந்த அவமானத்தையும் தாங்கும் வலிமை அவனிடமிருக்கிறது. இதுதான் முக்கியமானது. அவமானப்படுத்தியவரின் தோல்வி இங்கேதான் நிகழ்கிறது. அவனுடைய அந்த வலிமையின் முன்னால்.

தங்களின் கண்முன்னேயே மிகக் கேவலமான அளவுக்கு அவமானப்படும் கணவனிடம் உடனே பாய்ந்தோடி விட முடியாத மனைவியை அவன் கோபிக்கவில்லை. சபிக்கவில்லை. அவளுக்காகக் காத்திருக்கிறான். இறுதியில் சேர்த்தும் கொள்கிறான். தந்தையை விட்டு, அவருடைய இறுக்கங்களிலிருந்து தப்பி அவள் அவனிடம் சோகிறாள். தந்தைக்கு மேல் வர்க்கத்துக்கு ஒரு படிப்பினையைத் தருகிறாள்.

இப்படித்தான் சொல்ல மறந்தகதை நகர்கிறது.

தங்கர் பச்சான் சிலவற்றை இங்கே உணர்த்துகிறார்.

1) திறமையானவர்களை மேல்வர்க்கம் தனது தேவைக்காக நுட்பமாகச் சுவீகரிக்க முனைகிறது. அப்படிச் சுவீகரித்தவர்களின் உறவுவட்டத்தைத் துண்டித்தும் விடத் துடிக்கிறது. தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கப்பார்க்கிறது.

2) எப்போதும் அறம் அடிமட்ட மனிதர்களிடம் தான் வாழ்கிறது. (இதனை அவனுடைய குடும்பத்தவர்களின் வெளிப்பாடுகள் பலவற்றிலும் காணலாம்)

3) நாம் நமக்குத் தோதான இடங்களிலும் நிலைகளிலும் தான் வேர் கொள்ள வேண்டும், இயங்க முடியும் என்பது.

4) எத்தனைதான் தெளிவிருந்தாலும் மனதில் கோபமோ ஆவேசமோ வந்தாலும் குடும்பம் என்ற உறவு வட்டத்தின் சிக்கல்களை எளிதில் நினைத்தவாறு தீர்த்துவிட முடியாது. நமது சமூக அமைப்பில் இது ஒரு வலுவான நிலையையுடையதாயிருக்கிறது.

5) எப்போதும் மேல்வர்க்கத்தின் விருப்பு வெறுப்பாலும் அதிகாரத் திமிராலும் அடிமட்டத்தினர் ஆய்க்கினைப்பட வேண்டியேயிருக்கிறது.

6) உடலுழைப்பாலோ கல்வியாலோ மட்டும் அடிமட்ட மக்களின் வாழ்வுப்பிரச்சினைகளை தீர்த்துவிட முடியாது. உயர்த்திவிடவும் இயலாது.

இப்படிப்பலவற்றை தங்கர் புலப்படுத்துகிறார்.

அழகியைப் போல சொல்ல மறந்த கதையிலும் ஒரு உத்தி பின்பற்றப்பட்டுள்ளது. கிராமிய வாழ்வையும் நகர - மேல்வர்க்க வாழ்வையும் இணைத்துக் காண்பித்தல். இன்றைய பார்வையாளனின் உலகத்தையும் மீடியாக்களின் போக்கையும் விளங்கிக் கொண்டுள்ளார் தங்கர் பச்சான்.

தங்கர்பச்சானிடம் இருக்கும் இன்னொரு குணாம்சம் தமிழ் - தமிழர் வாழ்வு என்ற கரிசனை. சொல்ல மறந்தகதையில் இதனை அவர் வலுவாக வெளிப்படுத்தியுள்ளார். பாத்திரங்கள், நடிகர்கள், மற்றும் சினிமாவுடன் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் தமிழ் அடையாளங்கள் தான். பிராமணியத்துக்கெதிரான இயங்கு நிலையையும் கூட இங்கே காணலாம். பழ. நெடுமாறன் ஒரு திருமணக்காட்சியில் பங்கேற்பதும் தமிழர் திருமணமாக ஒரு மணக் காட்சியைக் காண்பிப்பதும் இதற்கான உதாரணங்களில் சில.

அதேவேளையில் இத்தகைய அடையாளத்தை விரும்பி தனது மகளின் திருமணத்தையே அவ்வாறு தமிழ்ப் பண்பாட்டுத் திருமணமாக நடத்திவைப்பவர் மறுபக்கத்தில் மனிதாபிமானத்தையோ நியாயத்தையோ புறக்கணித்து விடும் ஒருவராக இருப்பதையும் சொல்லமறந்த கதை காண்பிக்கிறது.

இவ்வாறிவ்வாறு எல்லோரும் 'சொல்ல மறந்த கதை' யாக தனது சினிமாவை தங்கர் பச்சான் உருவாக்க முயன்றிருக்கிறார். பாத்திரங்களுக்குப் பொருத்தமான நடிகர்கள், இசை.காட்சித்தளம், இயல்பை நெருங்கிய வெளிப்படைஎல்லாம் கதைக்கமைவாக இருக்கின்றன. பார்வையாளனில் நன்றாகச் சேர்கின்றன. ஆனால் எப்போதும் சிறப்பாகவேயிருக்கும் தங்கர்ப்பச்சானின் கமெராவைத் தான் இதில் அப்படிக் காணமுடியவில்லை.

**கருணாகரன்**

---

# சிந்திக்க வைத்த சந்திப்பு

## பொன்னாடைகளுக்காய்...?

மாலை ஆறு மணியிருக்கும் அந்த வீட்டுக்குப் போனேன். ஓய்வாக இருக்கும் நேரங்களில் அந்த வீட்டுக்குப் போவது வழக்கம்.

"மாமா--- மாமா---"

போகும் வேளைகளில் அவள் என்னருகில் ஓடிவருவாள். அவள் ஓடி வந்து கைகளில் பிடித்து இழுக்கமாட்டாள். சைக்கிளில் தொற்றமாட்டாள். கரியலில் இருக்கின்ற **bag** கைத் தூக்கிச் சிப்பை இழுத்து எதையும் தேடமாட்டாள்.

குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் செல்லம் கொடுக்கக் கூடாது. அவள் நல்ல பழக்கம், நல்ல வளர்ப்பு. ஒரு பிள்ளையின் பண்புகள், பழக்கவழக்கங்கள், நடத்தைகள் யாவும் பாராட்டுக்குரியனவாக அமைந்தால்; பாராட்டப்பட வேண்டியவர்கள் பெற்றோர்கள். அவர்களின் வழி நடத்தல்களால் தான் நல்ல பிள்ளைகளை உருவாக்க முடியும். நல்ல பிள்ளைகளால்தான், நற்சமூகத்தைப் பிரசவிக்க முடியும்.

பிரசவம் என்பது ஒரு புதிய வரவு.. அதைப் புழுதியில் தோய விடலாமா------?

ஏனோ தெரியவில்லை அவள் இன்று என்னருகில் ஓடிவரவில்லை.. வாசலில் துக்கமாய் இருந்தாள்.

அந்தப் பிஞ்சு மனதில் உருண்டு ஓடும் துக்கம் எது?

அவள் பக்கத்தில் வருவாள் என்றுதான் நினைத்தேன். கையிலிருக்கும் பேப்பரைக் கண்டும் அவள் எழும்பி வரவில்லை. அவள் பேப்பரைக் கண்டதும் ஓடி வருவாள். பறிப்பாள். தனக்குப் பிடித்த பகுதிகளைப் புரட்டுவாள். குறிப்பெடுப்பாள் அல்லது மனனம் செய்வாள்.

அவளுக்கு . என்ன பிரச்சினையாக இருக்கும்?

அவளுக்கு வீட்டில் எவரும் அடிப்பதில்லை. பக்கத்து வீட்டுப் பிள்ளை, படிக்கின்ற நேரத்தில் படத்துக்கு ஓட அவள் பார்த்துக் கொண்டேயிருப்பாள். தானும் படத்துக்குப் போகவென தாயிடம் அடம்பிடிக்க மாட்டாள்.

"----ஏன் ஒரு மாதிரியா இருக்கிறாய்?"

சைக்கிளில் நின்றபடியே கேட்டேன். எனது கேள்வி அவளின் அடக்கிய அழுகையைப் பிய்த்து விட்டது. விக்கி விக்கிச் சொன்னாள்.

"நான் "ஸ்கொலசிப்" எடுக்க மாட்டன்.

அதிர்ந்து போனன். அவள் படிக்கும் பாடசாலை புகழாரங்கள் நிறைந்த பாடசாலை. அதிகாரிகளினதும், அதிக பணம் படைத்தவர்களின் பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலை. புதிதாக அட்மிஷனுக்குப் போனால் "நீங்கள் எந்த இடம்? " என்று கேட்கும் பாடசாலை அதிபர். தெய்வாதீனமாகத்தான் அவள் அந்தப் பாடசாலையில் சேர்க்கப் பட்டிருக்க வேணும்.

"ஏன்-----?"

விடையை அறியும் ஆவலாகவும் கேட்டேன்.

"நானூற்றைம்பது கட்டினால் புத்தகம் தருவமாம். அதை வாங்கிப் படிக்கிறவர்களைத் தானாம் ஸ்கொலசிப்பில் சேர்க்கிறது. அம்மாவைக் காசு கேட்கத் தராவாம்."

மகளின் குரல்கள் நிற்க வீட்டு வாசலில் வந்தாள் தாய். "தம்பி உந்தப் பிள்ளை அஞ்சு நாளா வீட்டிலை படிக்கிறேலை ஒரே அழுகை தான். நானென்ன செய்யிறது---அண்டண்டாடு உழைச்சு மனுசன் கொண்டு வாறது சாப்பாட்டுக்கே போகுது. நானூற்றைம்பதுக்கு நானென்ன செய்யிறது.?"

தாயின் வேதனையில் தெரிந்தது பிள்ளை நல்லாய்ப் படிக்குமென்று, பிள்ளை படிக்குமென்ற படியால் தான் அந்தப் பிள்ளையை அவர்கள் அந்தப் பாடசாலையில் சேர்த்திருக்க வேணும்.இங்கே---

தாயின் வேதனை, குடும்பக் கஷ்டம் என்பது பிரச்சினையல்ல,ஒரு பிள்ளையின் மனம் எவ்வளவு உளவியல் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கிறது-----?

அதுவும் புலமைப் பரிசுப் பரீட்சைக்குரிய புத்தகம் படிக்காத பிள்ளை சிறந்த பெறுபேறுகளை எடுக்க மாட்டாதென்பதை தெரிந்த அந்த ஆசிரியை---- இப்படிப்பட்ட நிபந்தனைகளை மாணவர்கள் மத்தியில் விதிப்பதனால் பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படும் என்பதொன்றும் தெரியாத ஆசிரியர்களால் எப்படி மாணவர்களுக்கு அதிக பெறுபேறுகளைப் பெற்றுவிக்க முடியும்?

அந்தப் பிஞ்சு மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய அந்த ஆசிரியை ஒரு பட்டதாரியாக இருக்கலாம். அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியையாகவுமிருக்கலாம்.

ஒருவேளை அந்த ஆசிரியை இப்படி நினைத்திருக்கலாம்------ அந்தப்பாடசாலையில் அதிக மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுபவர்கள். அதிக பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் பெற்றோர்களால் வருடாவருடம் அந்த ஆசிரியை ஆசிரியர்(கள்) கௌரவிக்கப் படுகிறவர்கள். பணமாகவோ... அல்லது தங்க வளையல்களாகவோ... அல்லது அதற்கு மேலான அன்பளிப்புகளைப் பெறுவதுண்டு.

இந்த அவளைப் போன்றவர்களை புலமைப் பரிசுப் பரீட்சையில் தோற்று வித்தால் அவர்களிடம் மிருந்து எந்தப் பொன்னாடைகளும் பெறமுடியாது என்பதையே நினைக்கத் தோன்றுகிறது.

இந்தப் பொன்னாடைகளும் பதக்கங்களும் தான் சில ஆசிரியர்களை உயர்த்துகிறது... சில பாடசாலைகளையும் வளர்க்கிறது. பொன்னாடைகளுக்காய் புண்ணாகும் அவள் நாளை மண்ணாகலாமல்லவா...?

**எரிசரன்**

# தாய்மடி வாசம் 15

*நாங்கள் வெல்வோம்*
*நாங்கள் வென்றுவிடுவோம்*
*போய்ச் சொல்லு மகளே*
*உங்களது பலமும்*
*எங்களுக்கு வேண்டும்.*

'நாமிருக்கும் ஊருக்குள்ளே பேய்புகுந்ததேனம்மா'

என்ற புதுவையின் பாடல் வரிகள் காதுகளில் ஒலிப்பதாயிருந்தது. தூங்கவென அந்தக் குறுணிக்கற்கள் முதுகில் குற்ற படுத்திருக்கிறேன். எல்லோரும் தலைக்கு, தலையணையாக தங்களது பயணப் பைகளை வைக்க நான் காலுக்கு காலணைவைத்துப் படுக்கிறேன். சுதான்ரி வன்னியில் என்னிடம் கேட்க கேட்கவென இருந்து கேட்டது.

"ஏன் தலையணையை காலுக்கை போட்டுப்படுக்கிறீர்."

"எனக்கு லோபிறசர் சுதான்ரி. தலைக்கு தலையணை போட்டுப் படுத்தா தலைவிறைக்கும், காலையில் எழும்பமுடியாமல் இருக்கும், தலைசுற்றும்,"

"என்ன சிம்பிளாச் சொல்லுறீர் மருந்தெடுக்கிறேல்லையா,"

"எடுக்கிறது, கொண்டு வந்தனான்"

"ஓ...அதுக்கே ஏதோ தண்ணியைக் கலந்து நேற்று குடிச்சனீர்?"

"ஓமன்ரி"

"என்ன பிள்ளை நீர்! கவனமா அங்கை போனவுடனும் உந்த வருத்தத்தை மாத்தும்."

என் அம்மாவின் மறுவடிவமாய் சுதான்ரி சொன்னா.

புலம் பெயர்ந்து நாங்கள் வாங்கி வைத்திருக்கும் வருத்தங்கள் நிறைய இருக்கின்றன. இதையெல்லாம் விளக்கப் போனால் சுதான்ரிக்கு தலைசுற்றே வந்துவிடும். குளிர் தொடங்கினால் முதுகு வலியில் துடிப்பதை, வெயில்காலம் வந்தால் கண்ணைக் கசக்கிக் கொண்டு கண்ணீர் வடிக்கவைக்கும் அந்த வெயிற்கால நோயை, இன்னும் அப்பப்போ வெயில், மழை,காற்று, பனி,குளிர் ஒன்றாய் வந்து காலநிலை மாறும் போது மூன்று நான்கு கிழமைக்கு மூக்கடைத்து வைரஸ் காச்சலில் [illegible]பதை, விடுமுறை எடுக்க முடியாது நோயோடு துடிக்கும் எனக்கு மருந்தை மட்டும் வாங்கித் தந்துவிட்டு வேலைக்கு ஓடும் என் துணையின் துணையுமின்றித் துடிப்பதை.... எதையென்று விளக்க...! இங்கிருந்து காசனுப்பு காசனுப்பு எனக் கழுத்தறுக்கும் கத்திகளுக்கு இதுவெல்லாம் புரியுமா...?

நான் நாட்டுக்கு வந்த கோலம் வவுனியாவுக்குள்ளிருக்கும் என் உறவுகளுக்கு ஆச்சரியமாய் மட்டுமல்ல? கௌரவக் குறைவாயுமல்லவா இருந்தது, இதென்னது பட்டிக்காடு மாதிரி மஞ்சள் கயிறும், ஒற்றைப்பின்னலும், நல்ல உடுப் பாவது கொண்டு வந்திருக்கலாம், சும்மா ரண்டு சுடிதார் என்னத்துக்கு, ஒரு பவுணும் தேறாத ஒற்றைச் சங்கிலியும் உதென்னது கோலம், வெளிநாட்டிலையிருந்து வந்தமாதிரி இருக்கவேண்டாமே...! கேட்கலாம் கேட்டறுத்த அந்தக் காயங்களையெல்லாம் ஒரே நொடியில் கரைத்த வன்னியுறவுகளின் நேசம். ஆயுள் உள்ளவரைக்கும் அன்புப்பரிசு. என்னை நேசித்த அவர்களின் நினைவுகள் வந்து நின்று மனசைக்குடைய கண்களை அணைக்க மறந்தது தூக்கம்.

நேரம் பன்னிரண்டு 10. ஜெனரேட்டரில் இயங்கிக் கொண்டிருந்த மின் விளக்குகள் அணைகிறது. அந்த ஜெனரேட்டர் சத்தமும் நின்று நிசப்தமே அங்கு நிலவியிருந்தது. இடையிடை சிலரது உரையாடல்கள் அதைவிட எந்த அசுமாத்தமும் இல்லை. ஒரு சிமினி விளக்கு மட்டும் ஒரு ஓரத்தில் அழுது கொண்டிருந்தது.

எத்தனை விழிகளின் தூக்கம் பறித்து இந்த இரவு நீண்டு கிடக்கிறது...! பழைய வாழ்வானால் இப்போது எத்தனையாவது சாமமோ இவர்களுக்கு...

குழந்தைகளின் அழுகை இடைக்கிடை அந்த இரவின் அமைதியைக் குலைத்து பனிக்குளிரோடு கலந்து போனது. தூரமாய் கேட்டுக் கொண்டிருந்த ஏதோ சத்தம். அது எதுவென பிரித்தறிய முடியவில்லை. அந்த பனிப்புகார் மூட்டமிகு வான இருளின் அமைதியைக் குலைத்துக் கொண்டு விமானம் ஒன்று போகும் சத்தம் கேட்டது.

*ஊர் இருளும் முன்னம்*
*இருண்டு விடும்*
*எங்கள் வீடுகள்...*
*எங்கள் வீதிகள்...*
*எனினும்*
*இருளாது விடியலைத்*
*தேடும் விழிகளின்*
*ஒளியிலே விழியுறங்கும்*
*தேசமிது...*

*இருளகற்ற*
*எழுந்து நிற்கும்*
*எங்களது சூரியரே!*
*மானம் தந்தீர்*
*மரணம் வரையும்*
*சென்று நீர்*
*தனமானம் காத்தீர்!*


*உங்களை வணங்குகிறேன்.*
*உங்கள் பாதம் படிந்த*
*இந்த மண்ணை வணங்குகிறேன்.*

அடிக்கடி வந்து குற்றிய நுளம்பின் கடியைத் தவிர்க்க சுடிதாரின் சேலையை போர்வையாக்கித் தூங்கி விழித்த போது நேரம் 2 மணியென்றது மணிக்கூடு. அநேகர் எழுந்திருந்தனர். அவர்களின் கட்டுப் பாட்டுக்குள் போய்விட வேண்டும் எனும் ஆவல் எல்லோர் முகங்களிலும் தெரிந்தது. அந்தச் சிமினி விளக்கின் ஒளியிலும்....

நேரம் 4 மணியா விட்டி ருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் இயற்கைக் கடன்களை முடிக்க வென எழுந்து போய்க்கொண்டி ருந்தனர். ஒருவர் நாங்கள் படுத்திருந்த இடத்தை பாதுகாத்திருந்த தகரத்துக்கு பின்னே நின்று 'கடமை' புரிந்ததன் விளைவு பலரது கோபம் அவர்மீது விழ அவர் ஒளிந்த ஒளிப்பு அந்த விடியலின் சிரிப்பாயிருந்தாலும் சிலரது இப்படியான செயலின் முடிவால் ஏற்படும் பாதிப்பு பெரிதென்பதை அந்த மனிதருக்கு புரியவில்லை என்பது புரிந்தது. வசதிகுறைவு மிக்க இந்த இடத்திலும் பாவனைக்கு வந்து இரண்டு நாள்தான் எனினும் சுகாதாரத்துடனும், சுத்தமாகவும் இருக்கும் இடத்தை ஏன் அசுத்தப்படுத்த இந்த மனிதருக்கு மனசு வந்ததோ...?

சுத்தம் சுகம் தரும் என்பதை பாலர் வகுப்பிலிருந்தே படிப்பிக்கும் மண்ணிலிருந்து வேர் விட்டிருக்கும் முத்துகளின் வாரிசாக இருக்கும் அந்த மனிதனுக்குள் என்ன புகுந்துள்ளதோ...?

அந்தத் தேநீர்க் கடையில் நீண்டிருந்த வரிசையில் நானும் சுதான்ரியும் காத்து நின்றோம். பாரும் இந்த நிலைமைகளை? ஒரு நாளிலை முடியிற



பயணங்கள் எத்தினை கரைச்சலுக்கை நடக்குது...?

பொழுது புலர்ந்து நேரம் 6.40 எல்லோரும் தங்கள் கடமைகள் முடித்து ஒவ்வொரு கொட்டகைக்குள்ளும் வரிசையாய் நின்றனர். தமிழீழ காவல்துறையின் அனுமதி பெறுவதற்கான நேரமது. அந்த வரிசையில் நானும் சுதான்ரியும்... "பெடியளிட்டையிருந்து போகலாம் ஆனா அவங்களிட்டையிருந்து உள்ளுக்கை போறதுதான் பிரச் சினையே."அங்கு நின்ற பலரது அங்கலாய்ப்பு அது.... அந்த அங்கலாய்ப்புக்கு மத்தியிலும் நகைச்சுவைப் பேச்சுக்களும், சிரிப்புகளுமாய் கழிந்து கொண்டிருந்த அந்த நிமிடங்கள்... அந்தக் காத்திருப்பின் கணத்திலும் பலரை மனம் விட்டுச் சிரிக்க வைத்தது. துயர்வந்து அள்ளிப்போகிடினும் அஞ்சாது துணிந்து நின்று இன்றுவரை வன்னி மண்ணைத் தங்கள் கைகளிலே சுமந்து நிற்கும் இந்த மக்களின் முகங்களில் துயர் சுமந்த வடுவே மறந்து சிரித்த காட்சி மனசை நிறைக்கிறது....

அங்கு எங்களது கொட்டகையில் இருந்த ஒரு அம்மாவின் ஓயாத கதையில் அநேகர் அவர்பக்கம் தங்கள் பார்வைகளைக் கொடுத்து லயித்து நிற்க அந்த அம்மா கேட்டா

"தேத்தண்ணி ஊத்துங்கோ பிள்ளையள் ஒரே களைப்பாயிருக்கு....."

"சீனி முடிந்து போச்சு இந்த நேரம் பார்த்து தேத்தண்ணி கேக்கிறியள்"

என்றாள் அருகிலிருந்த யுவதி. அவள் கேட்ட விதம் எல்லோரையும் சிரிக்கவைக்க சுவையான உரையாடல்களும், ஆமிவந்தபோது ஓடிய ஓட்டமும், ஓயாத அலை யெழுந்து வன்னி



வெல்லப்பட்ட போது அவர்களடைந்த ஆனந்தத்தின் நினைவுபற்றியெல்லாம் நிறைய விடயங்கள் அலசப்பட்டு அரசிய லிருந்து பல விடயங்கள் அந்த நிமிடங்களில் பகிரப்பட்டுக் கொண்டிருந்தன. இவர் களெல்லாம் தங்கள் சொந்த ஊர்களிலும் இருந்து சாதாரணமான பயணப் போக்கு வரத்து, வாழ்வு, எல்லாமே இருந்து

## சுதந்திரா

நாடும் சுதந்திரமாயிருந்தால் இந்தச் சிரிப்பு இவர் களுக்கு நிரந்தரமாய் செளித்திடுமல்லவா? ஏன் நானும் ஊரோடு, உறவோடு வாழ்ந்திடுவேன்னல்லவா. அந்தவொரு நாளின் வரவின் வரு கைக்காய் நானும் காத்திருக்கிறேன்.

தமிழீழகாவல்துறையிடமிருந்து அனுமதி பெற்று விளக்குவைச்சகுளம் பகுதிக்குப் போவதற்கான வாகனத்தில் ஏறுகிறோம். கே.கே.எஸ். வீதியில் பலாலி வீதியில் பயணம் செய்த அந்த நாட்களின் நினைவுகள் வந்து போனது.

முன்னைய அந்தப் பயணங்களின் போது உள்ளே காற்றுப்புக முடியாது இருப்பவர்களே திணறப் பின்னுக்கு போங்கோ பின்னுக்குப் போங்கோவென சனத்தை அடையும் அந்த வாகன உரிமையாளர்கள் கத்தும் கத்தில்லாமல் ஒரு வாகனத்தில் கொள்ளக் கூடியவர்களை மட்டுமே ஏற்றியபடி பயணிக்கவிருந்தன. இந்தச் சாரதிகளும் சனங்களும் ஒழுங்கான போக்குவரத்துச் சட்டத்தை ஏற்று பயணிக்கக் கற்றுக் கொண்டுள்ளதும் மகிழ்வாக இருந்தது.

வெளிநாடுகள் போல் அளவுக்கு அதிகமானோரை ஏற்ற விடாது வாகன ஒழுங்கு விதிகள் அருமையாகக் கடைப்பிடிக்கப்படும் இந்தச் சட்டத்தை உருவாக்கி அருமையான கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வழியமைத்துத் தந்துள்ள எங்கள் தலைமையை எங்கள் தேசத்தவர் ஒவ்வொருவரும் காலில் விழுந்து வணங்கவேண்டும். இத்தனை அருமையான காவல்துறையை எங்களது மண்பெற்றிருப்பதற்கு போற்றுவதை விட்டு தூற்றவும் சிலர் இருந்தது மனதுக்கு வேதனையாக இருந்தாலும் பலருக்குள் சிலரை மறக்க முடிந்தது.

"அக்கா போறீங்களா?"

களைக்கக் களைக்க வந்து கேட்ட அந்த இளைஞனை யாரென நினைவுபடுத்தும் முன்னம் அவனே தன்னை அடையாளப் படுத்தி வைத்தான். ஓ... வன்னியை தரிசிக்க நான் இவனது வாகனத் திலல்லவா போனகிழமை வன்னிக் குப் போனேன்.

"ஓம் போப்போறன்"

"சரியக்கா அடுத்தமுறை வரேக்கை சந்திப்பமக்கா..."

சொல்லிவிட்டுப் போனான் அவன். அந்தக்குட்டி ராகுலனை இவனும் அன்று பார்த்தவன.

"சுதான்ரி அந்தப்பிள்ளையைப் பற்றிக் கேக்கட்டே..." கேட்ட எனக்குச் சொன்னா சுதான்ரி கேட்டுப்பாரும் சிலவேளை இங்கினை எங்காலும் நிக்கலாம். அவன் அதற்கிடையில் போய்விட்டான்.

"அல்லது போய் கடிதம் போடும் பதில் தருவினம்தானே."

என்னை அமைதிப்படுத் தினா சுதான்ரி. வவுனியா நகரம் வரையான அந்தக் கண்டிவீதியில் நீண்டிருந்த வரிசையில் நானும், சுதான்ரியும் அந்தப் பத்தரை மணி இளவெயில் சூட்டிலிருந்து எம்மைக் காத்துக் கொள்ள சுதான்ரி தனது குடையை விரித்து எனக்கும் பிடித்தா. ஊர்ந்துகொண்டிருந்த வரிசை வேகமெடுத்தது. அருகிலிருந்த அழிபட்ட மரங்களுக்கு நடுவேயும், அதற்கப்பாலும் நின்றிருந்தது சிங்களப் படையும், அதன் அதிகாரமும்...

*கண்டிவீதியே!*
*உனைப்பிரிந்து போகின்றேன்.*
*நீ மீட்கப்பட*
*தங்களைத் தந்து*
*உன் மடியில்*
*உயிர் விட்ட - அந்த*
*உத்தமர்களின்*
*உயிர் மூச்சுலவும்*
*நிலம் விட்டு போகின்றேன்.*

*நெஞ்சு கனக்கிறது*
*நினைவெல்லாம்*
*முல்லை மண்ணிலும்,*
*அந்த முதிச மண்ணில்*
*என் சொந்தமாகிய*
*அனைத்து உறவுகளையும்*
*எண்ணியபடி நடக்கிறது.*

*எத்தனை துயர் சுமந்தாய்,*
*எத்தனை வதை சுமந்தாய்,*
*எத்தனை விலைகொடுத்தாய்,*
*எத்தனை நாள் விழிநீர் சொரிந்தாய்,*
*உன்னவர் யாருமின்றி*
*உயிர் வலிக்க*
*இமை நனைத்து*
*எத்தனைநாள் அழுதிருப்பாய்...*

*கண்டிவீதியே!*
*அத்தனை துயரெல்லாம்*
*அழிந்ததாய் நீ*
*எண்ணுவதாய்*
*என் மனசு சொல்கிறது.*

*இந்த அமைதியிங்கு*
*யுத்தம் களைந்து*
*எங்கள் சுற்றம் சூழ*
*நாங்கள் வாழும் வழிபிறக்க*
*வழிதருமா?*
*கேள்விகள் எழுகிறது...*

*போகிறேன் தாய்மடியே*
*போகிறேன்*
*உன் வாசம் சுமந்து கொண்டு*
*ஐரோப்பிய வாசம் போகிறேன்.*

*மீண்டும் வருவேன் - என்*
*கருவறையில் உயிர்தளைத்து*
*உருவான என் பிள்ளைகளை*
*அழைத்து வந்து*
*உன் மடியில் வாழ்வதற்கு*
*வழிவரும் எனும் நம்பிக்கையுடன்*
*போகிறேன்...*


*தாய்மடிவாசமென் நாசியில்*
*மணக்கிறது - என்*
*தாய்மடியே போகிறேன்*
*உன் வாசம்*
*என் உயிரில் சுமந்து கொண்டு*
*இதோ போகிறேன்...*
*மீண்டும்*
*வருவேன்*
*உன் மடியில் வாழ்வதற்கு*

முற்றும்

ஏழ்மை, சிலரைப் பணிவாக்குகிறது. ஆனால், மிகப்பலரை சூதுடையோராய் ஆக்குகிறது. - புல்வர் லிட்டன்




# கிரகண வீடு



பத்து வருடங்களுக்கு பிறகு விக்கி இன்றுதான் ஊருக்குப் போகிறான். ஊரில் காலடிகள் வைக்கப் போவதை நினைக்க அவனுக்கு எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறது....

ஊரென்றதும் அவனுக்குப் போஸ்ற்மாஸ்ரரின் கிணறுதான் ஞாபகத்தில் வருகிறது. அவரின் கிணற்றடிக்கு அடிக்கடி ஓடி வரும் சாத்திரியார்.... தணிகாசல மண்ணை.... பக்கத்தில் உடுப்புகள் தோய்க்கும் பொன்னுக் கிழவன்.... நித்திராஜ்.... கார்த்திகா....

இவர்கள் எல்லோரையும் அவனுக்குப் பார்க்கவேணும் போலை இருக்கிறது.

போஸ்ற்மாஸ்ரரின் கிணறு என்றால் ஊரில் தெரியாதவர்களேயில்லை.கிணறு நல்ல ஆழம். தேசிக்காயை கிணற்றுக்குள் போட்டால் சந்நதி தீர்த்தக் கேணிக்கைதான் மிதக்குமென்று தணிகாசலமண்ணை சொல்லுவார்.கிணற்றுக்குள் தவறியெவரும் விழுந்தால் அவர்களைப் 'பாந்து'களுக்குள் கொண்டு போய்ச் செருகிவிடும். அந்தக் கிணத்துக்கு சிலர் சரியான பயம்.

அப்ப யாழ்ப்பாணம் ராணித்தியேட்டரில் "தீ" படம் வந்த புதிசு. படத்துக்குச் சரியான கிறவ்ட். விக்கி நித்திராஜுடன் படம் பார்க்க வெளிக்கிட்டான். அவனிடம் காசில்லை. ஓடிப்போய்த் தாயைக் கேட்டான். தாய் கொடுக்கவில்லை.

"காசு தராட்டி போஸ்ற் மாஸ்ரற்றை கிணத்துக்கைதான் போய்க்குதிப்பன்." வெருட்டிக் கேட்டான். வெருட்டுக்குப் பயந்து அவள் காசை எடுத்துக் கொடுத்தாள். அந்தக் கிணத்தை வைத்து அவன் நிறையச் சாதித்திருக்கிறான். இப்படியே விக்கியைப் போல போஸ்ற்மாஸ்ரரின் கிணத்துக்கு நிறையக் கதைகள் இருக்கின்றன....

அது ஆழத்துக்கேற்ற நல்ல அகலமான கிணறு. துரவுமாதிரி. போஸ்ற்மாஸ்ரர் அப்ப கல்லெறிந்து பிடித்த காணிக்குள்தான் அவர் அந்தக் கிணற்றை வெட்டினவர். கிணறு வெட்டுறதுக்கு முதல் அந்தக் காணியுக்கை படைபடையாய்ச்சரியான பார்க் கல்லுகள்."பார்க்காணி" என்றுதான் இப்பவும் சாத்திரியார் அதைச் சொல்லுவார்.

புல்டோசர் கொண்டு வந்து போஸ்ற்மாஸ்ரர் அந்தக் கல்லுகளைப் பிரட்டிப் போட்டுத்தான், அளவெட்டி மாணிக்கர் கூட்டைப் பிடித்து அந்தக் கிணத்தை வெட்டினவர். கிணறு வெட்டித் தண்ணியைக் கண்டதும் உடன பானையைக் கட்டிக் கிணத்துக்கை இறக்கிப் போட்டு கிணத்துக்கையேபெரிசாய்ப் பொங்கிப் படைச்சவர்.

கிணத்து வேலைகளெல்லாம் முடிந்தவுடன் தணிகாசலமண்ணையிடம் பெரியகிடாய் வாங்கிவந்து கிணத்துக்குப் பலிகொடுத்தவர். மாணிக்கம் கூட்டு சந்தோசமாகப் போகவேணுமென்று அவர்களுக்கு சாராயப் போத்தில்களும் வேட்டிகளும் எடுத்துக் கொடுத்தார்.

அப்ப விக்கி சின்னப் பொடியன். கிணத்து மிதியில் வைத்துத்தான், மாணிக்கம் கிடாயின் காதுகளை வெட்ட பார்த்துவிட்டு அவன் குழறிக் கொண்டோடினவன். வெட்டிய காதுகள் இரண்டையும் கிணத்துக்கை போட்டார். போஸ்ற்மாஸ்ரர். மிதியில் நின்று கிடாயைத் தடவினார். நல்ல பெரிய மிதி. பாயளவு வரும்.

புல்டோசருக்குப் பார் பாராய்க் கிளம்பிய கல்லுகளை எடுத்துத்தான் மிதியையும் பெரிய பீலியையும் பொழிஞ்சு போட்டவர். குறவர்களைக் கொண்டுதான் அவர் கல்லுகளைப் பொழிஞ்சவர். பொழிஞ்ச குப்புசாமி இப்பவும் விக்கியின் கண்களில் நின்றான்.

குப்புசாமிக்குப் பெரிய மீசை. வீரப்பன் மாதிரி. கல்லுகள் எல்லாவற்றையும் பொழிஞ்சு முடித்ததும் கடைசி நாளன்று குப்புசாமி பெரிய தூக்கு மூடலுக்குள் நாகபாம்பைக் கொண்டு வந்தான். தூக்கு மூடலைத் திறந்து விட்டு அவன் மகுடியை எடுத்து ஊத பாம்பு ஆடிக் கொண்டு மிதியில் ஏறியது.

இப்ப போஸ்ற்மாஸ்ரர் ஊரிலில்லை. குடும்பமாகக் கனடாவுக்குப் போய்ப் பத்து வருசமாய் விட்டது. அவர் போய் அடுத்த வருசமே தணிகாசலமண்ணை அவற்றை காணியிக்கை தனக்கும் பங்கென்றார். சாத்திரியாரும் தனக்கும் ஒரு துண்டு இருக்குதென்றார். உறுதியும் வைத்திருக்கிறனென்றார்.

காணியைத் தன்னுடையதென்று யார் சொன்னாலும் "போஸ்ற்மாஸ்ற்ரை கிணறு" என்ற பெயரை எவராலும் மாற்ற முடியாது. பொன்னுக்கிழவன் இதை ஒருதடவை சொல்ல தணிகாசலமண்ணை கிழவனுக்கு அடிக்கப் போனவர்.

பாவம் பொன்னுக் கிழவன். அதுக்குப் பிறகு கிணறு பற்றி வாயே திறப்பதில்லை.

கிணறு எவருக்குச் சொந்தமொன்றாலும் அந்தக் கிணறு பற்றிய ஞாபகம் ஏதேனுமொன்று, ஊரில் ஒவருதருக்குமிருக்கிறது.-விக்கிக்குப் போஸ்ற் மாஸ்ரரின் கிணற்றை நினைக்க நித்திராஜ் தான் நினைவில் வருகிறான்....

அன்று ஒரு வெள்ளிக் கிழமை.

அந்தக் கிணத்துடிக்கு விக்கியோடு நித்திராஜ் குளிக்கப் போனான். எப்பவும் அவனோடுதான் நித்திராஜ் கூடித்திரியிறவன். பள்ளிக்கூடம் போவிலும் அவனோடுதான். அவனோடுதான் ஐந்தாம் வகுப்பும் படிக்கிறான்.

நித்திராஜ் கிணத்தடிக்கு வரும்போது பெரியலொறி ரியூப்பைக் காற்றடித்துக் கொண்டு வந்தான். அவன் ரியூப்பைக் கிணத்துக்குள் போட்டான். உடுப்புக்களைக் கழற்றி வைத்து விட்டு வெறும் மேலுடன் குதித்தான். விக்கியும் வெறும் மேலுடன் குதித்தான்.

நித்திராஜ் சரியான சுரட்டன். விக்கியை ரியூப்பால் பிரட்டிவிட்டு தலையைப் பிடித்துத் தண்ணீருக்குள் அமத்தினான். தண்ணீர் மூக்குக்குள் போய் அவன் தத்தளித்தான்.

"ஐயோ....ஐயோ......"

பெரிய சத்தமாய் அவன் கத்தவும் நித்திராஜ் விடவில்லை. அவன் களைத்துக் திணறத்தான் நித்திராஜ் விட்டவன். அவன் ரியூப்புக்குமேல் ஏறியிருந்து கொண்டு நித்திராஜ்"வுக்கு அடித்தான். துடையில் கடித்தான். எப்படிச் செய்தாலும் நித்திராஜ் கோபிக்கமாட்டான். அவன் அடிக்க அடிக்க நித்திராஜ் மெதுவாக ரியூப்புக்கு காற்றைத் திறந்து விட்டான்.

"சனியன்!"

எரிந்து கொண்டு அவன்மேலே ஏறினான். அவனுக்கு ரியூப் இல்லாதுவிட்டால் சரியான பயம். நித்திராஜ"ம் மேலே ஏறினான். அவன் உடுப்புக்களைப் பார்த்தான். கழற்றி வைத்த இடத்தில் எதுவுமேயில்லை. அவனுக்கு ஏக்கம் அலைகளாய் எழும்பி நுரையடித்தது. நித்திராஜ் பேசமாலே நின்றான்.

உடுப்புகளில்லாமல் எப்படி வீட்டுக்குப் போவது...? அவனுக்கு கவலை நெஞ்சை இறுக்கியது. முகத்தில் கருமை படர்ந்து தவித்தலைந்தது. அவனுக்கு அழுகை வந்து விட்டது. உடுப்புகள் எடுத்தது யாராயிருக்குமென்னக் குழம்பினான்.

கிணற்றைச் சுற்றி நிறையக் கஞ்சாந்தேறைகள் நிற்கின்றன. அழைஞ்சால் சரியாய் மணக்கும். தணிகாசலமண்ணை அதை புடுங்கிக்கொண்டு போய் வீட்டுச் சுவர்களுக்கு அடிக்கிறவர். அந்த மணத்துக்கு நுளம்புகள் வராதாம்.

தணிகாசலமண்ணைதான் வம்புக்கு எடுத்தொழிச்சிருப்பாரென்று அவன் செடிகளை கால்களால் தட்டித்தட்டிப் பார்த்தான். உடுப்புகள் ஒரு இடமுமில்லை.

கருணைரவி

நித்திராஜ் சாத்திரியாரைச் சந்தேகித்தான். அவர் ஒவருநாளும் மாடுகளைக் கொண்டு வாறவர். கிணத்தடியில் மாடுகளை விட்டுத்தண்ணி அள்ளிவைக்கிறவர். வைக்கும் போது கண்டபடி பேசுவார்.

"உந்த ரண்டு காவாலிகளாலும் தான் கிணத்தடி நுதம்புது. ஒவருநாளும் றங்கிக் குளிக்கக் குளிக்க தண்ணியும் உவராப் போகப்போகுது."

அவர் இப்படிப் பேசுவது வழக்கம். அவர் பேசுவதொன்றும் நித்திராஜுக்குப் பிடிக்காது. ஒரு நாள் அவர் கிணத்துக்குப் பக்கத்தில் மாடுகளைக் கட்டிவிட்டுப் போனார். நித்திராஜ் கயிற்றை அவிழ்த்து விட்டு மாடுகளைக் கலைத்து விட்டான். அவர் மூன்று நாட்களாக மாடுகளுக்கு அலைந்தவர். அந்த ஆத்திரத்தில் தான் உடுப்புகளை எடுத்திருப்பாரென நித்திராஜ் நினைத்தான்.

பக்கத்து தணிகாசல மண்ணையின் காணியில் ஒரு பனையும் கொஞ்ச வடலிகளும் நின்றன. சாத்திரியார் மாடுகளைக் கொண்டுவந்து விட்டிட்டு பனைக்குக் கீழேதான் படுக்கிறவர். சில வேளைகளில் கங்குமட்டைகளுக்குள் ஒழித்திருப்பாரென நினைத்துக்கொண்டு நித்திராஜ் பனையடிக்கு ஓடினான். அவனின் பின்பக்கத்தைப் பார்க்கச் சேரிப் பொடியள் மாதிரி இருந்தது.

பனைக்குக் கீழே உடுப்புகளிருக்கும் என நினைக்க விக்கிக்கு அழுகை நின்றது. நித்திராஜ் கனநேரமாக பனையையும் வடலிகளையும் பார்த்து விட்டு வெறுங்கைகளோடு ஓடி வந்தான். ஓடிவந்ததும் கேட்டான்

"விக்கி.... பனையிலை முட்டியளிருக்குது. கள்ளூறக்கிக் குடிப்பமே?"

அதுக்கு அவன் ஒன்றும் சொல்லவில்லை. நித்திராஜைப் பார்த்து விட்டு அவன் பேசாமல் நடந்தான். அவன் ஒரு கையால் முன்னுக்குப் பொத்திக் கொண்டு மறுகையை தலையில் வைத்தபடி நடப்பதைப் பார்த்துக் கொண்டு நித்திராஜும் வந்தான்.

தரவைப் பள்ளத்துத் தண்ணியில் பொன்னுக்கிழவன் உடுப்புகளைத் தோய்த்துக் கொண்டிருந்தார். தோய்த்த உடுப்புகள் எட்டமாய் நிலத்தில் காய்ந்தபடியிருந்தன. நித்திராஜ் மெதுவாகப் போய் சாரமொன்றைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தான். அதைப் பொன்னுக்கிழவன் கண்டதும் நொருங்கிப் போனார்.

பொன்னுக்கிழவன் நித்திராஜைத் துரத்தவில்லை. அவரால் துரத்தவுமேலாது.

"உந்த அழிவான்ரை கிணறு உதிலை இருக்குமட்டும் மனிசன் நிம்மதியா நிண்டு தொழிலொண்டும் செய்யேலாது. உந்தக்கிணறு எப்ப கவிழப் போகுது..."

பொன்னுக்கிழவன் திட்டியபடி காய்ந்த உடுப்புகள் எல்லாவற்றையும் எடுத்தார்.

நித்திராஜை நினைத்தபடி விக்கி அந்தத் தெருவால் நடந்து செல்கிறான். அவனுக்கு அந்தத் தெருவைப் பார்க்க முன்னைய தெருவாய்த் தெரியவில்லை. சுடலைத் தெருமாதிரி குண்டுகளும் குழிகளுமாயிருந்தன.

தெருக்களில் ஒரு சனங்களுமில்லை.......

முன்பு என்றால் அந்தத் தெருவால் எவ்வளவு சனங்கள் போகிறவர்கள்.... கண்டல் காட்டுதில்லை விறகுகளோடு எத்தனை சைக்கிள்கள் போகும்......

அலம்பல்களோடும், தென்னம் மட்டைகளோடும் எத்தனை வண்டில்கள் போகும்....

தலைகளில் மீன் பெட்டிகளுடன் எத்தனை பொம்பிளைகள் கைகளை வீசிக் கொண்டு குடுகுடுவென- ஓடிச் செல்வார்கள்....

ஐஸ்பழக்காரன் மணியடித்துக் கொண்டு போவான். மயிலு சாரத்தைச் சிரைச்சுப் பிடிச்சுக் கொண்டு காத்தவராயனில் வருவான்.

அந்தத் தெருவை வெறுமையாக்கி விட்டு மனிதர்கள் எல்லாம் எங்கே போய் விட்டார்கள்?

துயர் நெஞ்சை அடைக்க அவன் தணிகாசலமண்ணையின் பெரிய கல்வீட்டைப் பார்த்தான்.

அதுதான் ஊரில் பெரியவீடு-பெயின்றடிச்ச எட்டறைக் கல்வீடு. மாபிள் பதிச்ச அறைகளுக்குள் போனால் கால்கள் எல்லாம் குளிர்ந்து கொண்டு வரும். தண்ணீர் ராய்ங்கென்றால் குசினிப் போறணையளவு வரும். மதிலுக்கு வெளியால் ஒரு தண்ணிப்பைப் பூட்டியிருந்தவர்.

அவன் பள்ளிக்கூடம் விட்டு வரேக்கை அந்தப் பைப்பில்த்தான் தண்ணியைக் குடித்து விட்டுச்செல்வான்.

இப்ப மதில்களையே காணவில்லை. வீட்டுக்குக் கூரைகள் எதுவுமில்லை. சுவர்களில் நிறைய ஓட்டைகளிருந்தன. வளவுக்குள் நிறையப் பனைக் குற்றிகளும் மண் மூட்டைகளுமிருந்தன. வீட்டுச் சுவரில் "வெடிபொருட்கள் கவனம்" என எழுதியிருந்தது.

தணிகாசலமண்ணை எங்கே...?

வினா தொண்டைக்குள் அடைக்க விக்கி நடந்து சென்றான். தூரத்தில் கார்த்திகா நடந்து வந்தாள். அவள் நல்லாய் வளர்ந்து விட்டாள். அவளின் சுருள்க் கற்றை மயிர்கள்தான் அவனுக்கு அவளை அடையாளம் காட்டியது.

அவள் அவனைக் கண்டதும் தலையைக் கவிழ்த்தாள். அவளின் முகத்தில் எந்தச் சிரிப்புகளுமில்லை. முகம் கறுத்துச் சொண்டுகள் நல்லாய்க் காய்ந்திருந்தன. முன்னைய கார்த்திகா போல எந்தத் துடிதுடிப்புக்களும் அவளிடமில்லை. அவளைப் பார்த்ததும் அவனுக்கு அந்தரமாயிருந்தது.

கார்த்திகாவுக்கு என்ன நடந்தது...?

அவளின் பெயரை விக்கி எத்தனை தடவைகள் கைகளில் எழுதியிருப்பான்... போஸ்ற் மாஸ்ரரின் கிணத்தடிக்கு அவள் கஞ்சாந்தேறை புடுங்க வாறவள். அவளுக்கு எத்தனை கடிதங்களை கிணத்துக்கட்டின்மேல் எழுதி வைத்து விட்டு, பனைமறைவில் அவளைப்பார்த்தபடி நின்றிருப்பான்.....

அவள் அவனைத் தாண்டிப் போனாள். அவள் தாண்டும் போது முகத்தை ஒரு தடவையேனும் அவனுக்குத் திருப்பவில்லை. அவன் காலடிகளை எடுத்துவைக்காமல் திருப்பி அவளையே பார்த்தான்.

குட்டிக்கதை

# கால் உடைந்த கதிரை



ஏவல பிசாசு கூரையைப்பிடுங்கின மாதிரித்தான் இப்ப சம்பவங்கள் நடந்தேறின. எதற்கெடுத்தாலும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, அதிகாரிகளாய் மாறிவிடும் மனிதர்கள் முன்னால் மனிதாபிமானம் தலைகுனிய வேண்டியுள்ளது.

தன்னை உணராதவர்கள் தனது ஆழத்தை அறியாதவர்கள் எப்போதும் மற்றவர்களிடம் பிழை கண்டு பிடித்து தண்டிக்க விரும்புகிறார்கள்.

இப்படி பல்வேறு வடிவங்களில் நடமாடும் மனித சீவன்களில் ஒருவர் தான் கோபால் ஐயா.

நடுத்தரவயதை எட்டிப் பிடித்திருக்கும் அவர் அரச சேவையில் சாதாரண ஊழியனாக சேர்ந்து, இன்று ஓரளவு உயர்ந்த நிலைக்கு வந்தார். தனது திறமையால் அல்ல, குறுக்கு வழியால்...

மேலதிகாரிகள் கட்டளை இடுவதற்கு முன்பே அவரின் கைகள் மார்புடன் கட்டுண்டு விழிகள் நிலம் பார்த்து நிற்கும் அபூர்வ விசுவாசி. அதுவே அவரை உயர்த்தி வைத்தது.

கோபால் ஐயாவைச் சுற்றி ஒரு தொழிலாளர் கூட்டம்....

வேலைகளைப் பங்கிட்டு வழங்கும் நேரத்தில் அவரது அதிகாரத் தொனியும் நடைமுறையும் தொழிலாளர்களிடையே எரிச்சலை ஊட்டுவதாக அமைந்திருந்தாலும் அவர்களும் மௌனமாகி தலையசைத்து நிற்பார்கள்.

வீட்டு நிலைமை அப்படி வேலை பறிபொய் விட்டால்....!

அப்படித்தான் கணேசன் என்ற வாட்ட சாட்டமான இளைஞன் புதிதாக வேலைக்கு வந்து சேர்ந்தான்.

புதிதாக இணைந்தவனை மற்றத் தொழிலாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்த கோபால் ஐயா.

"கணேஸ் இஞ்சை நான் சொல்லுறதுதான் சட்டம். என்னைக் கேட்டுத்தான் எதையும் செய்யவேணும். இஞ்சை உங்களுக்குள்ளை கூடிக்கதைக்கக் கூடாது. இல்லாட்டில் என்ன நடக்கும் தெரியுமா?"

அவர் ஒரு நமட்டுச் சிரிப்புடன் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

அவனும் சரி என்பது போல் தலையாட்டினான். ஆனாலும் அவர் மீதும் அவரது நடத்தல் போக்கின் மீதும் முதன் முதலிலேயே கரும் புள்ளி ஒன்றைப் போட்டுக் கொண்டான்.

கணேசன் இளைஞனாக இருந்த போதும் அவனது அனுபவம் பெரிதாக இருந்தது.

தொழிலாளர்கள் அனுபவிக்கும் துன்பமான வாழ்க்கை நகர்வுகள் எப்போதும் அவனது நெஞ்சில் வேதனையின் வடிவங்களாக உருக்கொண்டிருக்கும்.

சிறு வயதிலிருந்தே தன் கல்வியை மேம்படுத்திக் கொண்டு வந்தவன் தந்தையின் சாவுடன் அதிர்ந்து போனான்.

குடும்ப பாரத்தை தலையில் சுமந்து கொண்டவன் கல்விக்கு முழுக்குப் போட்டு விட்டு வேலைக்கு வந்தான்.

கணேசன் ரோசக்காரன்...!

மதிய உணவு முடிந்தபின் எல்லோரும் மரநிழலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

"அட, கோபால் ஐயா வாறார்" என்றான் ஒருவன்.

"வந்தால் என்ன இப்ப ஓய்வு நேரம் தானே" என்றான் கணேசன்.

எல்லாரும் மெல்ல மெல்ல இடத்தை விட்டு அகலத் தொடங்கினர். கணேசன் மட்டும் அங்கேயே இருந்தான்.

கணேசன் எழும்பாதது கோபால் ஐயாவுக்க எரிச்சலை ஊட்டியது.

"டேய்....எல்லாரும் எழும்பிப்போறாங்கள் நீ மட்டும்? எழும்படா நாயே..."

அவர் கணேசனின் சேட் கொலரைப் பிடித்து இழுத்தார்.

"எடடா கையை...."

கணேசன் கையைத் தட்டி விட்டான்.

கோபால் ஐயா திகைத்துப் போனார்:

மற்றத் தொழிலாளர்கள் வாயில் விரலை வைத்துக் கொண்டனர்.

உறைந்து போய் நின்ற கோபால் ஐயா தலையைத் தொங்கப் போட்டவாறு அந்த இடத்தை விட்டு நகர்ந்து கொண்டிருந்தார்.

கால் உடைந்து நிலத்தில் சாய்ந்து கிடக்கும் நாற்காலி ஒன்று அவர் கண் முன் நிழலாகத் தெரிந்தது.

- முருகு பாரிமகன் -

---

அவள் தலையை வடிவாக இழுத்துக் கட்டவில்லை. மயிர்கள் கிழிந்து கிழிந்து காற்றுக்குப் பறந்து கொண்டிருந்தன.

"கார்த்திகா...."

அவன் இழகிய மனத்துடன் அவளைக் கூப்பிட்டான். அதுக்கும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை. அப்போது அவள் வந்தபக்கமாக யாரோ இருமிக் கேட்டது. திரும்பினான். சாத்திரியார் முச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்தார். வண்டியை சிறுவனொருவன் தள்ளிக் கொண்டு வந்தான். அச்சிறுவன் அவருக்குப் பேரனாயிருக்கலாம். அல்லது பூட்டனாயுமிருக்கலாம்.

சாத்திரியாரை அந்த முச்சக்கர வண்டியில் பார்த்ததும் அவனின் சுருங்கிய சுவாசப்பை விரிய சற்றுநேரமெடுத்தது.

சாத்திரியாருக்கு என்ன நடந்தது...?

குழம்பியபடி அவன் சாத்திரியாரையே பார்த்தபடி நின்றான். அவரும் அவனையே பார்த்தார். அவருக்கு தோல் நல்லாய்ச் சுருங்கி விட்டது. கண்கள் இடிந்து போய் கன்னங்கள் மிதந்திருந்தன. சாத்திரியார் கிட்ட வர முதலே

"சாத்திரி ஐயா...."

வாஞ்சையோடு கூப்பிட்டான். அவர் அவனை வடிவாகப் பார்த்துக் கொண்டு கிட்டவந்தார். அவன் அவரின் கைகளைப் பிடித்தான். அவர் வெம்பினார். வார்த்தைகள் வெளியில் வரப் புரண்டுகொண்டிருந்தன. வாயை இறுக்கி மூடிக்கொண்டு கண்களையும் மூடினார். கண்ணீர் கன்னங்களால் வடிந்து அவரின் சாரத்தில் சிந்தியது. கண்களைத் திறந்து

"நீ மணியத்தின்ரை மோனே..."

கேட்டு விட்டு அவனின் கைகளைத் தடவினார்.

"ஓ"

சொல்லிப்போட்டு பேசாமலே நின்றான். அவனுக்கு மனம் இய்ந்து விட்டது. நொந்து போன அவரை என்ன நடந்ததெனக் கேட்டு மனதை நோகடிக்க அவன் விரும்பவில்லை.

அவனுக்கு நித்திராஜைப் பார்க்கவேணும் போலிருந்தது. மனசை அரித்துக் கொண்டிருக்கும் ஓவருகேள்விகளுக்கும் நித்திராஜ்தான் விடையை வைத்திருப்பான். அந்தவிடைகளிருந்து தன்னை புதுப்பிக்க வேணுமென நினைத்த அவன்

"சாத்திரி ஐயா...நித்திராஜ் எங்கை....?"

"அவசரமாகவே கேட்டான். நித்திராஜ் என்றதும் அவரின் இமைப்புருவங்கள் அகல. நெற்றியில், விபூதிப்பட்டைகளாய் சுருக்குகள் விழுந்தன.

"அவன் முந்திய ஆட்டம் தான் இப்பவுமாடுறான்."

சொல்லிப்போட்டு மூச்சை வேகமாக விட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு நித்திராஜ் மேலுள்ள கோபம் இன்னும் ஆறவில்லை மாடுகளுக்குக் கயிற்றைக் கழற்றிவிட்டதை அவர் இன்னும் மறக்கவில்லை என்பதை நினைத்தவன் மீண்டும் கேட்டான் நித்திராஜ் எங்கே நிக்கிறானென்று.

"அவன் உங்கினேக்கை துவக்குகளோடு திரியிறான்."

துவக்குகளோடென்றதும் நித்திராஜை அவனால் நம்ப முடியவில்லை. நித்திராஜுக்கு துவக்கெங்காலான்? நித்திராஜ் எப்ப அப்பிடி மாறினான்? அவன் கொஞ்சநேரம் குழம்பிக் கொண்டு நின்றான்.

"போய் கிணத்தை பாரொருக்கால்...."

அவர் சொல்ல சிறுவன் முச்சக்கர வண்டியைத் தள்ளினான். வண்டியின் சில்லுகளில் தேளொன்று நசிபட்டுத் துடித்தது.

ஏனப்படிச் சாத்திரியார் சொன்னார்...? சாத்திரியாரின் அந்தச் சொற்களைக் கேட்டதும் அவனுக்குக் கிணத்தை உடனே பார்க்கவேணும் போலிருந்தது.

தோழிலிருந்த பாய்க்கை கையில் மாற்றிக் கொண்டு கிணத்தடிக்கு ஓடினான்....

கிணத்துக் காணியைச் சுற்றிநின்ற பூவரங்கதிகால்கள் எதுவுமேயில்லை. பக்கத்தில் நின்ற தணிகாசலமண்ணையின் ஒற்றைப்பனையும் வடலிகளும் கருகியிருந்தன.

வல்லை வெளியாய் எல்லா இடமும் நீண்டிருக்க பயம் அவனைக் கவ்விக் கொள்ளவில்லை. ஒரு வெறித்தனம் அவனைக் கிளர்த்திக கொண்டிருந்தது.

போஸ்ற் மாஸ்ரரின் காணிக்குள் குடிச்சுவிட்டுப் பாடிக் கொண்டு திரியும் மயிலுமட்டும், குந்திப்பிடிச்சுக் கொண்டிருந்தான். அவன்தான் கார்த்திகாவின் அப்பா.

அவன் ஓடி ஓடி எல்லா இடமும் கிணத்தைத் தேடினான்.

கிணறு எங்கே...?

அங்கலாய்த்துக் கொண்டு மயிலுவிடம் ஓடினான். மயிலு அவனைக் கண்டதும் கைகளைக் கட்டிக் கொண்டு எழும்பினான். மயிலுவின் முகத்தில் நிறையச் சுருக்கங்கள் விழுந்திருந்தன. சுருக்குகள் விழும் வயதல்ல மயிலுவுக்கு.

"இதிலை இருந்த கிணறு...?"

தளம்பிக் கொண்டு கேட்டான்.

"நித்திராஜ் கிணத்தை ஆக்களோடு வந்து தூத்துப் போட்டு ஒவருநாளும் பின்னேரத்திலை பந்து விளையாட இந்தக் காணிக்கு வாறவன். அவனைத் தான் பாத்துக் கொண்டு நிக்கிறன்."

சொல்லி விட்டு மயிலு அழுதான்.

---

## உறவுகளிடம் உண்மையைச் சொல்லுங்கள் அவர்கள் நிம்மதியாக உறங்கட்டும்



அதிவேக சொகுசு வாகனங்களில்
வருபவர்கள்,
இந்த செழிமையை பார்த்துவிட்டு
ஒரு போதும் நம்பமாட்டார்கள்
இங்கு பலநூறு உடலங்கள்
புதைக்கப்பட்டதென்று
பச்சை படர்ந்திருக்கும்
நிலத்தைப் பார்த்தவர்
ஒரு போதும் நினையார்
இந்தப் பலரின் குருதியாலும்
கண்ணீராலும் விளைந்ததென்று
அவர்களுக்குத் தெரியாது
இந்த செழிமையும், பசுமையும்
எங்களின் உடற்கூறுகளை
உள்ளிழுத்து உருவானதென்று.

ஆயிரமாயிரம் பேர் வந்தனர்
அனுதாபத்தை சொல்லி விட்டுப் போயினர்
சிலர் கண்ணீர் சொரிந்தனர்
சிலர் புகைப்படமெடுத்தனர்
சிலர் மண்ணை கண்ணிலொற்றிக்
கொண்டனர்
சிலர் மண்ணை பகுப்பாய்வுக்கென
பையிலிட்டனர்
ஒரு காலம்
பத்திரிகைகளும், வானலைகளும்
நாங்கள் உறையும்
இந்த "செம்மணி"யையே
உச்சரித்தன
பல நாள் முன்னர்
ஒரு நாள்
வீரப்புதல்வர்கள் வந்தனர்
காற்றிலே கலந்த எங்கள்
மூச்சைப் பற்றிச் சொன்னார்கள்
"ஒரு நாள் வெல்வோம்"

சொகுசு வாகனங்களில்
எங்கள் உறவுகளுக்கு
சேதி கொண்டு செல்பவரே
உங்கள் அலுவலகங்களின் முன்னால்
உண்ணாது உறங்காது
இருக்கும் உறவுகளுக்கு,
நாங்கள்
பாடசாலை செல்லும்
போதிலும்
ஆலயம் செல்லும் வழியிலும்
ஆசுப்பத்திரி செல்லும் வழியிலும்
நாங்கள் இலாது போன
கதையை அவர்களுக்குச்
சொல்லுங்கள்
அதன் பிறகு என்றாலும்..
அவர்கள் நிம்மதியாக உண்ணட்டும்
அவர்கள் நிம்மதியாக உறங்கட்டும்
அதன் பிறகென்றாலும்
அவர்கள் என்றுமே
நிம்மதியாகவே....

தே. நிலவன்.




## குட்டிக்கதை

# நட்பு

வானதியும், கீதாவும் பாடசாலைக்குச் சென்றார்கள். வகுப்பறையைச் சுத்தம் செய்து முடிக்கவும், ஆயத்த மணி அடிக்கவும் சரியாக இருந்தது, தாரணி இன்னும் வரவில்லை. தாரணியை எதிர்பார்த்து நின்றாள் கீதா.

என்ன நடந்திருக்கு மென்றபடி யோசித்துக்கொண்டு நின்றாள். "தாரணி வராவிட்டால் என்பாடு சரி. வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியதுதான்." கீதா தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

"என்ன கீதா, தாரணி வரவில்லை என்றதும் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்" என்று கேட்டாள் வானதி. பொருட்படுத்தாமல் சிந்தனையில் இருந்தாள் கீதா.

வகுப்புக்கு வந்த வகுப்பாசிரியர், ''தாரணி வரவில்லையா.....?'' என்றதும், ''வரவில்லை ரீச்சர்'' என்று கவலையுடன் கூறினாள் கீதா.

மறுநாள், பாடசாலை செல்லாத அன்றைய நாள் பாடக்குறிப்புகளை வாங்குவதற்காய் தாரணி வானதியிடம் சென்றாள்.

"கீதாட்டக் கொடுத்து விட்டு வாங்க மறந்துவிட்டேன்" என்று கூறினாள் வானதி. "நான் போய் வாங்குகிறேன்'' என்று தாரணி கூறியதும், என்ன செய்வது என்று தெரியாமல், "சொறி... சொறி... தாரணி, சுதன் சேரிட்டக் குடுத்தனான்..." என்று வானதி தயக்கத்துடன் கூறினாள்.

கள்ளம் இல்லாத வெள்ளை உள்ளத்தைக் கொண்ட தாரணி, "நான் போய் வாங்கு கிறேன்" என்று கூறிச்சென்று விட்டாள்.

பொறாமை கொண்ட வானதி, தாரணியையும், கீதாவையும் பிரிப்பதற்குத் திட்டங்கள் போட்டாள்.

''இருவரும் நல்ல நண்பிகளாக, கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். ஏன் என்னால் முன்னேற முடியாமல் இருக்கிறது" என்று தனக்குள் நொந்து கொண்டிருந்தாள். வானதி.

'ஒருவருக்கொருவர் கேட்டுப் படிக்கிறார்கள், ஏன் நானும் கேட்டுப்படிக்கக் கூடாது. மக்கு' என்று நினைத்தாள், தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டாள்.

இருவரையும் பிரித்தால் படிப்புக் குழம்பும் அவர்களைவிட தன்னால் படிக்க முடியும் என்ற கெட்ட குணத்தைக் கொண்டிருந் தாள் வானதி.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் கீதா, வானதியிடம் சென்றாள். மகிழ்வுடன் அவளை அழைத்து வந்த வானதி, "கீதா நீ தாரணியோட நன்றாகப் பழகினாலும், உன்னைப்பற்றிக் கூடாம ரீச்சருக்கும் வகுப்புப் பிள்ளைகளுக்கும் சொல்லுறது உனக்குத் தெரியாது. எனக்கே உன்னைப்பற்றிச் சொன்னவள்'' என்றாள் வானதி.

கீதாவோ வானதியைப் பற்றி நிறைய அறிந்திருந்தாள். 'இது வானதியின் சதியாகத்தான் இருக்கும்' தனக்குள் நினைத்துக் கொண்டாள் கீதா.

''நானும், தாரணியும் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டுதான் பழகுகின்றோம்'' என்று கூறினாள் கீதா.

எதனையும் சொல் லிப் பிரிக்க முடியாது என்பதனை உணர்ந்த வானதி, "உண்மையாக உங்களின் நட்பைப் பாராட்டுகிறேன் கீதா. உன்னையும் தாரணியையும் பொறாமைப்பட்டுப் பிரிக்க நினைத்தேன். "என்னை மன்னித்துக் கொள். இப்பதான் தெரியும் பொறாமைப்படுவதால் தான் இப்படியே இருக்கிறேன்" என்று வருந்தினாள் வானதி. தவறை உணர்ந்து வருந்திய வானதியை, கீதாவும், தாரணியும் தங்களுடன் சேர்த்துக் கொண்டனர்.

அமிர்தா

## வாரம் ஒரு குறள்



நாம் எல்லோரும் ஒரு தாயின் குழந்தைகள். ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க வேண்டியவர்கள். ஒருவருக்கு ஏற்பட்ட துன்பத்தை இன்னொருவரால் பொறுக்க முடியாதவர்கள். தெரிந்தோ தெரியாமலோ அடுத்தவர் ஒருதவறு செய்தால் அதனை மன்னிக்க வேண்டியவர்கள். ஆனால் நாம் இப்படியாக நடந்து கொள்ளுகின்றோமா? பதிலாக அடுத்தவர் மீது எரிந்து விழுவதும், அவர் மனம் வருந்தும்படி நடப்பதும், அவர் படும் துன்பத்தை ரசித்து மகிழ்வதுமாகவே எமது வாழ்க்கை கழிகிறது. இப்படி வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஆடை அலங்காரங்களை மட்டும் செய்து கொண்டு அதனால் நாகரிகமானவர்கள் என எண்ணிக்கொள்ளுகின்றோம். இது நாகரிகமா? இல்லவே இல்லை. இதை வள்ளுவர் எப்படி விவரிக்கிறார் என்று பாருங்கள்.

**"பெயக் கண்டும் நஞ்சுண் டமைவர்**
**நயத்தக்க நாகரிகம் வேண் டுபவர்."**

## உலக சுதந்திர தினங்கள் இவை

| | | | |
|---|---|---|---|
| மார்ச் | 23 | - | பாகிஸ்தான் |
| மார்ச் | 26 | - | பங்களாதேஷ் |
| ஏப்ரல் | 30 | - | நெதர்லாந்து |
| மே | 03 | - | போலந்து |
| மே | 17 | - | நோர்வே |
| யூன் | 02 | - | இத்தாலி |
| யூன் | 12 | - | பிலிப்பைன்ஸ் |
| யூன் | 15 | - | ஐக்கிய இராச்சியம்(UK) |
| யூலை | 04 | - | அமெரிக்கா |

எம்.எஸ்.வரன்

## குறுக்கெழுத்துப் போட்டி 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | 06 |
| | 08 | | | | |
| 13 | | | | 17 | |
| | | | 22 | | 24 |
| | | 27 | | | |
| | 32 | | | | |

### இடமிருந்து வலம்

01) தேவலோகப் பசு
08) பற்றற்ற நிலை.
13) வேண்டுதல் குழம்பி உள்ளது.
15) பௌத்தாகமம் குழம்பியுள்ளது
27) அடைக்கலம் குழம்பி உள்ளது.
32) மலர்.

### மேலிருந்து கீழ்

01) மாதங்களில் ஒன்று.
02) இனிமை.
06) அன்பு இடை எழுத்தை இழந்துள்ளது.
17) எருது.
22) இளைய சகோதரன் குழம்பி உள்ளான்.
24) ஒரு வகை மீன்.

இளையவர்களே! ☞ மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.9 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அபிநயம்
08. கடிகாரம்.
13. சத்திரம்.
22. நுதல்.
25. பவித்திரம்.
31. உபநயனம்.

**மேலிருந்து கீழ்**

02. பிரகஸ்பதி.
13. உபதேசம்.
21. நவம்.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.9 இன் பரிசுக்குரியவர்**

க.சாந்தினி
திருவையாறு,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி இல.11
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# புலி

*புலிக்குப் பசித்தாலும்*
*புல்லை உண்ணாது!*
*பூனை போல பதுங்காது!!*
*'புலி' என்றாலே புல்லரிக்கும்!!!*

*கொட்டத்தை அடக்கிடும்*
*கொடியபுலி!*
*'கொர்,கொர்'என்றே உறுமிடும்!! இரையைக்*
*கௌவிக்கிழித்துப் புசித்திடும்!!!*

*காட்டில் வசிக்கும் புலி!*
*கானகம் எங்கும் திரியும் புலி!!*
*கைகால் இரண்டிலும்*
*கூரிய நீண்ட நகங்கள் கொண்டபுலி!!!*

*கோரைப்புல் போலவே*
*நீண்டு வளர்ந்த பற்கள்!*
*பதுங்கியிருந்து பாய்ந்திடும்!!*
*பயங்கர மிருகம்!!!*

யூட் திலீபன் பிரான்சிஸ்
தரம் - 10A
மட்டு/புனிதமிக்கேல்கல்லூரி
தேசிய பாடசாலை.

## நகைச்சுவை



சிங்கம் : இந்த நாய் இனம் வீரமுடையது என்பதை எப்படி கண்டுபிடிச்சே!
புலி : "வாள்... வாள்.." என்று தானே எதுக்கும் கத்துது.

இ.ராஜ்குமார்
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

## விடுகதைகளும் விடைகளும்

1) கடிப்பவனுக்கு கடிபடுபவன் காவல் அவன்யார்?

2) பச்சைநிறத்தவன் சிவப்பு நிறத்திற்கு மாறிய பின்னும் வீரியம் குறைவதில்லை அவன் யார்?


3) வெளிச்சத்தை சுமந்தபடி இருட்டை சிதறடிப்பான் அவன் யார்?

4) உயரத்தில் வந்த மின்சாரம் ஒப்பற்ற மின்சாரம். சில நேரம் கண்ணைப்பறிக்கும் மின்சாரம் அது என்ன?

யோ.தமிழினி.
தரம் -02
கிளி/தருமபுரம்.ம.வி.

**விடைகள்**
1) பற்கள் - உதடுகள்
2) மிளகாய்
3) மின் மினிப் பூச்சி
4) மின்னல்

## அறிந்து கொள்ளுங்கள்



உலகிலேயே மிகப்பெரிய திமிங்கிலம் வெள்ளைத் திமிங்கிலம் ஆகும். கடல்வாழ் உயிரினங்களையும் பறவையினங்களையும் சாப்பிடக்கூடியது. கப்பல்களையும் கவிழ்க்கக் கூடியது. இது 36 அடி நீளம் வரை வளரக்கூடியது.

# சாமியச் சாட்டி பூதம் தின்னுது

**கொஞ்ச** நாளைக்கு முதல் ஒரு திடீர் அழைப்பு வந்தது. மூண்டுமணிக்கு ஒரு அவசர கலந்துரையாடல் உடனவா எண்டு.

"விடியக்கலியாணம் பிடி வெத்தில பாக்கெண்டுதானே" இப்ப கொஞ்சக் காலமா ஒவ்வொண்டும் நடக்குது. சரி போனன். ஒரு கருத்தரங்கு- சும்மாயில்ல பாட்ஸ் பாட்சா காலமயிருந்து நடக்குதாம் இப்ப எங்கட பகுதி கலைத்துறை.

காலம வாத்திமார், பிறகு ஆய்வாளர்கள், பிறகு மதிப்பீடு வேலைத்திட்டம் இப்ப இவள நேரமா நடத்தின வேலையளப் பற்றி சனத்துக்கு செய்ய வேண்டிய பிரச்சாரம். என்ன ஒண்டும் விளங்கயில்லயே. எட நானும் 'குறுடன் பெண்டிலுக்கடிச்ச' கதையா தாறு மாறாச் சொன்னா என்ன விளங்கும்.

பாடசாலை செல்லாத சிறுவர்கள், படிப்பை இடை நிறுத்திய சிறுவர்கள் இவையள மீண்டும் அல்லது புதுசா பள்ளிக்குப் போகவரவைக்க வேணும். இது தான் திட்டம். வலுதிறமான திட்டம் தான். ஆனா ஏன் பிள்ளையள் பள்ளிக்கு போகேல்ல போனதுகள் ஏன் இடையில நிண்டதுகள்.

"நோய் நாடி நோய்முதல்நாடி
அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச்செயல்"

எண்டு இதை திட்டம் போட்டவை காலமையிருந்தில்ல கனநாளா. உதை கலக்கிப்பாத்திரிக்கினம். காரண்ங்களையும் கண்டுபிடிச்சிருக்கினம். கண்டு பிடிச்சுக்கட்டி வேலையில்லை. மாடும் பிடிச்சுக்கட்டி னாத்தான் பால் கறக்கலாம் பாருங்கோ. பின்ன காரணங்களையும்தான் ஒருக்காப் பாப்பமே.

ஆசிரியர் தட்டுப்பாடு. முதலாவது வருகுது. இண்டை வரைக்கும் இது தீராத பிரச்சினை. இருக்கிற ஒண்டிரண்டு திறமைசாலியளும்- பாவம் ஓடியோடிப்படிப் பிக்கினம்.விடிய ஆறுமணிக்கு ஒருசென்டர், ஏழு மணிக்கு இன்னொண்டு பிறகு பள்ளிக் கூடத்தில கையெழுத்த வச்சிட்டு கொஞ்சம்..... பின்நேரம் மூண்டு மணிக்கு ஒரு இடம். நாலுமணிக்கு ஒண்டு. அஞ்சு மணிக்கு ஒண்டு பிறகு தனிப்பட வீடுகளில போய் பத்து மணிவரைக்கும் எண்டு ஓடியோடி படிப்பிக்கினம். நான் கேள்விப்பட்டன் ஒரு மற்ஸ் மாஸ்டர் மாசம் இருபதாயிரம் வருமானம் எடுக்கிறாராம் எண்டு. நம்பேலாமத்தான் கிடக்கு. இந்தளவுக்கு ஆசிரியர் தட்டுப்பாடுதான் காரணம். இல்லையெண்ணப் போறியளோ.

அடுத்தது மகிழ்ச்சியான கற்பித்தலில்லை. வாழ்க்கை மகிழ்ச்சியா இருந்தாலெல்லே? மரபுவழிக் கற்றல் முறை, கவர்ச்சியில்லாத வகுப்பறை- இதைமட்டும் நான் ஏற்கமாட்டன்.

புதுக்குடியிருப்பில இண்டைக்கு அமைச்சுகளாலயே வந்து அலுவல் பாக்கினம். ஆனா வகுப்பறையளுக்கு ஒரு கதிரையும் நேரா நிக்காது.ஒரு மேசையோ, கதிரையோ முழுநாளும் காவடியாடினபடியே இருந்தா படிப்பில எப்பிடி கவனம் போகும். இந்த சின்ன விசயங்கூட உங்க வந்து போறவைக்கு விளங்கேல்லப் பாருங்கோ. பள்ளிக்கூடத்துக்கு கிட்டசவம் போனாலும் பறையடிக்கக்கூடாது எண்டு சட்டமிருக்கு. இஞ்ச பள்ளிக் கூடத்தின்ர நாலுபக்கமும் லவுஸ்பீக்கர், மேளதாளம்



தமிழ்க்கவி

எல்லாம் கட்டுக்காவலில்லாமத்தான் நடக்குது. முறைப்பாடு செய்யிறதுக்கும் ஆளில்லை. லைசெஞ்சு குடுக்கவும் ஆளில்ல. பின்ன இப்பிடிப்பட்ட கவர்ச் சியள் வகுப்பறையில இருக்கயுக்க படிக்கிறதுக்கென்ன?

ஆசிரியரால தனிமையாக்கப்படுதலும் ஒரு காரணமாம். எடேய் அரசாங்கத்தாலேயே தனிமையாக் கப்பட்ட இனம் தமிழினம். பிறகு வகுப்புகளிலயும் தேர்வுவச்சு படிக்கக்கூடிய பிள்ளையள் படிக்க மாட்டாத பிள்ளையள் எண்டு புள்ளி அடிப்படையில பிரிக்கினம். கேட்டா புள்ளி குறைவா எடுத்த பிள்ளையள்ள அதிக கவனமெடுக்கப் போகினமாம் அதுக்குத் தான் பிரிக்கினமாம். எடேய் என்ன மாதிரிச்சுத்துமாத்து. பள்ளிக் கூட மட்டத்தில கூடின புள்ளி எடுக்க வேணுமெண்டா இவை ஆரில கவன மெடுப்பினம். விழுந்தமாட்டில குறி சுடுகிறது இப்பிடித்தான். வன்னியில காலங்காலமா இருந்துவாற அடுத்த சுமை பெற்றாரோட வேலையளப் பகிர்ந்து கொள்ளுற சுமை. காலமையே வேலைக்கு வயலுக்குப் போறவர் மனிசிக்காறியிட்ட சொல்லுவார்.

"மெய்யேப்பா தம்பி பள்ளியால வந்த உடன மாடுகளை மேயக் கட்டிப் போட்டு வரம்ப செதுக்கச் சொல்லு. சின்னவனிட்ட சாப்பாட்டைக் குடுத்து புலவுக்கு அனுப்பு" எண்டு. அதுகளும் 'பாலன் பஞ்சம் பத்து, வரியம் எண்ட மாரி தேப்பனுக்குப் பின்னால மாடு சாய்க்க வெளிக்கிட்டிருங்கள்.

வேற தொழிலாளற்ற பிள்ளையளும் அப்பிடித்தான். இப்ப ரிவிரச நடவடிக்கையளோட தானே வன்னிக்க வெள்ளத்தில அள்ளுப் பட்டமாரி கன விசயங்கள் வந்தது. ரியூசன் சென்ரருகள் மியூசிக் கிளாசுகள், நுண்கலையள் எண்டு வந்தது. யாழ்ப்பாண மாவட்டத்துப் பிள்ளையளோட போட்டிபோட ஏலாம வன்னிப் பிள்ளையள் வகுப்புகளில உளவியல் தாக்கமடைஞ்சதும் நடந்தது. கனக்கச் சொல்லிறியள். மற்ஸ்சும், இங்கிலீசும், சயன்சும் எங்க கிடந்தது இஞ்ச-அல்ல இப்ப தன்னும் வாத்திமார் இருக்கினயோ... அறிஞ்சா எனக்குஞ் சொல்லுங்கோ.

போனதுகள் தான் துலைஞ்சுபோகட்டும் இப்ப ஆரம்பிச்சுப் படிக்கிறதுகளையாவது அடிப் படையிலயிருந்து உந்த இங்கிலீசப்படிப்பிப்பும் எண்டா. கோதாரியில போவார் 4ஆம் 5ஆம் தரத்துப் பிள்ளையளுக்கு இன்னும் புத்தகமே குடுக்கேல்லயே. அறியாத புதுமொழிய வாத்தியும் இல்லாம புத்தகமும் இல்லாம என்னண்டு படிக்கிறது. மளமளண்டு நாளோட வருசம் முடிய ஆறாந்தரத்துக்கு வந்திருங்கள். அங்கால 6ந் தரத்து இங்கிலீசுப்புத்தகத்தை சிதம்பரசக் கரத்தைப் பேய்பாத்தமாரிப் பாக்கப் போகுதுகள். ஏற்கனவே கல்வியறிவுள்ள, ஆங்கில அறிவுள்ள பெற்றாருக்கு பிள்ளையாப் பிறந்தாத்தான் இனிக் கல்வி. இதுக்கொரு வழிகாண ஒருத்தராலும் ஏலாதோ இல்லைக் கேக்கிறன்.

நோய், இயலாமை, ஊனம், பட்டினி-வறுமை, பள்ளிக் கூடம் கிட்டஇல்லை, பெஞ்சில், கொப்பி இல்லை, பெற்றார் அக்கறையில்லை. இது பெற்றார் அக்கறை இல்லாததும் ஒரு காரணமாம்.

பிள்ளையள் எத்தனை பேர் எண்டா கனபேர் ஆனால் அதுகளுக்கொரு பிறப்புப்பதிவோ ஒண்டோ ஒண்டுங் கிடையாது. சண்டை வந்திட்டுது. ஆமி வந்திட்டான். அகதியா வந்திட்டம். எண்டு ஆயிரஞ்சாட்டு. நிவாரணம் பதியமட்டும் மறக்கிறதில்லை. பள்ளிக்கூடத்தால இடையில நிண்டதுகளும் இதே கதி.

இடம் மாறி வந்த பள்ளிக் கூடத்தில இடம்மாறி வந்த பிள்ளையள் படிச்சதுகள். பள்ளிக்கூடம் சொந்த இடத்துக்கு போகேக்க அங்கவர முடியாத பிள்ளையளின்ர விடுகைப்பத்திரம், பிறப்புப்பத்திரம், கணிப்பீடு, இதுகளக் குடுத்திட்டுப் போனா என்ன? நெடுக அலையபோக்குவரத்து வசதி இருக்கோ, அப்பவும் கஷ்டப்பட்டு பள்ளிக் கூடத்தைத் துரத்திக் கொண்டு போனா அதிபரைச் சந்திக்கப் போறியளே! என்னத்துக்கு விசர்பத்திற கதையக் கேக்கிறியள்- படிப்பிக்கிறது நெடுங்கேணி. வசிக்கிறது ஜெயபுரம். இடம் பெயர்ந்து நிண்டது மல்லாவி. இடம் பெயர்ந்து படிச்சவை இப்ப படிக்கிறது கிளிநொச்சி. உதுகிலும் பார்க்க "நில்லடி வீட்டில இப்ப படிச்சென்ன உத்தியோகமே தேடப்போறாய்" எண்டது எவ்வளவு சுகம்.

பாருங்கோ கதையோட கதை பக்கத்து வீட்டில ஒரு நாலு பிள்ளையளோட ஒரு குடும்பம்- அருகில ஒரு குடும்பம் மூண்டு பிள்ளையள் போல் முழுக்க ஒரே விளையாட்டும் சண்டையுந்தான். "ஏன் பள்ளிக்குப் போகேல்ல" எண்டா சேர்க்கமாட்டாங்க எண்டு சொல்லுங்கள்.

இந்த கலைஞர்களை கூட்டி, பிரச்சாரம் செய்யட்டாம். நாடகம் , பாட்டு, பேச்சு எண்டு எது செய்தும் கல்வியாசையைத் தூண்டி விடுங்கோ எண்டு கேட்டினம்.

நாங்களும் செய்தம். எல்லாத் தாய்தேப்பனும் பிள்ளையள் படிக்கிறதை விரும்பத்தான் செய்யினம். பக்கத்து வீட்டுப் பெடியன் ஓடிவந்தான். "பேனாவத்தாங்க" எண்டு கேட்டான். "ஏன்ரா"

"நான் பள்ளிக்கூடம் போகப்போறன்"

"நீ....முதல் படிக்கேல்லயே"

"படிச்சனே திருக்கணாமலையில"

"எத்தினையாம் வகுப்பு"

"மூணாம் வகுப்பு இப்பருந்தா அஞ்சு"

"ம் இந்தா பேனை"

வாங்கிக்கொண்டு பெரிய புளுகமா ஓடினான். இவ்வளவு ஆசைய மனசிலவச்சிருக்கிறான். உண்மையா இந்தத் திட்டத்தை போட்டவங்களப் போற்றோணும் "எண்டு சந்தோசப்பட்டன். கொஞ்ச நேரத்தால அந்த வீட்டுப் பொம்பிளை ரெண்டுபிள்ளையளையும் கூட்டிக் கொண்டு வெளிக்கிட்டுப் போனா பார்க்க சந்தோசமாக் கிடந்தது.

ஒரு பதினொரு மணியிருக்கும் பொடியன் வீட்ட வாறான் முகஞ்செத்துப் போய்க்கிடக்கு.

"என்னடா?"

"இந்தாங்க பேனா"

"என்னடா பள்ளிக்கூடம் விட்டிட்டுதே"

"இல்ல...நம்பளச் சேக்கலாதுண்ணுட்டாங்க"

"ஏனாம்"

"சர்ட்டிபிக்கட் இல்லாம சேக்க மாட்டாங்களாம்.

வாசல் கதவை இறுக்கிப் பூட்டிப்போட்டு வெளியாலவா வெளியாலவா எண்டா. என்ன கருத்து "சாமியச் சாட்டிப் பூதம் தின்னுது" வேற என்ன?

---

# செவ்வாயில் மனிதன் எப்படி இறங்குவான்



**செவ்வாய்க்கு** மனிதன் செல்ல முன்னேற்பாடுகளில் வல்லாண்மை நாடுகள் ஈடுபட்டுள்ளன. 2018க்கும் 2020க்கும் இடையில் மனிதனை செவ்வாயில் தரையிறக்க அமெரிக்காவும், ரஸ்யாவும் போட்டி போடுகின்றன.

ரஸ்யா பொருளாதார நெருக்கடியில் இருந்தாலும் செவ்வாயில் தனது குடிமகனை இறக்குவதில் தீவிரமாக உள்ளது.

ஆனால் அமெரிக்காவோ செவ்வாயில் மனிதனை தரையிறக்கும் திட்டம் எப்படிப்பட்டது என்பதையே வெளியிட்டுவிட்டது. ஏற்கனவே பிறிதொரு கோளை சந்திரனில் அமெரிக்கா தனது குடிமக்கள் 12 பேரை தரையிறக்கி அனுபவம் பெற்றதும் - செவ்வாய்ப் பயணம் மாற்றமானது.

சந்திரனிற்கான பயணக் காலம் 4 நாட்கள். சந்திரனில் வளிமண்டலம் - இந்த தெரிந்த வரை முறைகளோடு சந்திரனில் தம்மவரை அமெரிக்கா 1969 முதல் 1972 வரை தரையிறக்கி பூமிக்கு கொண்டு வந்து விட்டது.

செவ்வாயில் நிலைமை வேறு. செவ்வாய் ஒரு பிரதான கோள். அதற்கு ஒரு வளிமண்டலம் இருக்கிறது. பூமியை விட 38 வீதமான ஈர்ப்பு விசை, தரை வெப்ப நிலை - 67°F என்ற நிலைப்பாடும் செவ்வாய்க்கு உள்ளது. இதற்கும் மேலாக செவ் வாய்க்கான - பூமியிலிருந்தான பயணக்காலம் 259நாட்களாகும். செவ்வாய்க்கு சென்றுவர 518 நாட்களாகும். ஆக இது மனிதருக்கு மிக நீண்ட விண்பயணம். இதில் தான் சிக்கல். நீண்ட காலத்துக்கு பயணிக்கும் விண்கலத்தில் மனிதருக்கான சுவாச ஒட்சிசன், உணவு கொண்டு செல்லப்பட வேண்டும். பின் செவ்வாயில் தங்கும் போதும் இதே ஏற்பாடு. திரும்ப பூமிக்கு மீள்கையிலும் இதே ஏற்பாடு தேவை.

இந்த நிலையில் செவ்வாய் மனிதப் பயணம் - சந்திரப் பயணம் போல் சாதாரணமாக அமையப் போவதில்லை.

இதற்காகவே நாஸா மிகப் பெரும் திட்டத்தை போட்டுள்ளது.

செவ்வாய்க்கு மனிதப் பயணம் மேற்கொள்ளப்பட்டும் முன் செவ்வாயில் மனிதன் தங்குவதற்கான வீடு கட்டப்பட வேண்டும். அந்த வீடு பூமியின் வளிமண்டலத்தை கொண்ட ஒரு விண்கலம்.

இதற்கு முன்னதாக ஒரு விண்கலம் செவ்வாயக்கு அனுப்பப்படும். அதில் 6 தொன் திரவ ஐதரசனும் ஒரு 130 குதிரை வலு அணு உலையும் செல்லும். அணு உலை ஒரு நகரும் சக்கர ஊர்தியில் பொருத்தப்பட்டிருக்கும்.

இவை அந்த விண்கலம் மூலம் பனி உறை செவ்வாய்ப் பகுதியில் இறக்கப்படும். விண்கலம் இறங்கியதும் அணுஉலை தாங்கி ஊர்தி இறங்கி செவ்வாயின் வளிமண்டலத்தை குழாய் ஒன்று மூலம் உறிஞ்ச ஆரம்பிக்கும். செவ்வாயின் வளிமண்டலத்தில் காபன் - ஒக்சைட் செறிவாக உள்ளது. இந்த காபன்டை ஒக்சைட் திரவ ஐதரசனுடன் தாக்கமடையும். தாக்கமடை கையில் - நீரும் - மெதேனும் பிரிகையடைகின்றது இந்த மெதேன் ரொக்கட் எரிபொருளாக பயன்படுத்துவதற்காகும். இவை ஒரு கொள் கலனில் சேமிக்கப்படும். மனித தரையிறக்கத்துக்கு ஒரு மாதம் முன்பாக செவ்வாய் தரையிலிறங்கி பணி செய்யும். இது ஒரு மாதத்தில் 108 தொன் ரொக்கட் எரிபொருளை உற்பத்தி செய்யும். இது செவ்வாயிலிருந்து பூமிக்கு திரும்பும் விண்கலப் பயணத்துக்குப் போது மானதாகும்.

இதற்கிடையில் 6 விண்வெளி வீரர்களைக் கொண்ட விண்கலத்தை செவ்வாயை நோக்கி நாஸா செலுத்தும்.

இந்த விண்கலம் செவ்வாயில் தரையிறங்க அங்கு தமது பணியை மேற்கொண்டு பூமிக்கு மீள்வர்.

இதில் சவாலாக இருக்கப் போவது விண்வெளி வீரர்களுக்கான 500க்கும் அதிக நாட்களான விண் சஞ்சாரம்.

ரஸ்யர்கள் ஆண்டுக்கு அதிகமாக விண்ணில் தொடர்ந்து சஞ்சரித்து அனுபவத்தைப் பெற்ற வர்கள். அமெரிக்கர்களோ 6மாதமே கூடுதலாக விண் சஞ்சாரம் செய்பவர்கள்.

அதைவிட செவ் வாய்க்கான விண்கலத்தை காவி பயணிக்கவல்ல வலுவான ரொக்கட் இப்பொழுது அமெரிக்காவிடம் இல்லை. சந்திர விண் கலங்களை காவிய சற்றன் -5 விண் கலமே அமெரிக்காவின் அதிபாரம் தூக்கி ரொக்கட் ஆகும். ஆனால் அதைவிட பாரம் தூக்கி ரொக்கட்டாக எனேர்ஜியா ரஸ்யாவிடம் உள்ளது.

பொருளாதார ரீதியாக இல்லாவிட்டாலும் தொழில் நுட்ப ரீதியான வலு ரஸ்யாவிடம் உள்ளது.

யார் முந்துகிறீர்கள் என்பதைப் பார்ப்போம். இப் பொழுது செவ்வாய் தோசம், எப்படித் திருமணத்தை பாதிக்கிறது என்பதை நாங்கள் ஆராய்ந்து கொண்டிருப்போம். தொடர்ந்தும் தீவிரமாக.

து.அருவி

---

கண்மூடித்தனமாய் நம்புவதைவிட, அளவுக்கு மீறி ஐயப்படுவதே மேல். - ராபர்ட் இங்கர்ஸால்



# பிரதமர் சுட்டும் 2001

சிறிலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஓராண்டை நிறைவுசெய்துள்ளமை குறித்து பல்வேறு தரப்புக்களாலும் மகிழ்ச்சி தெரிவிக்கப் படுகிறது.இந்த ஓராண்டு பூர்த்தியை சிங்களதேசத்தின் ஒரு பகுதி மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் செய்தது.அதேசமயம் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும்,சமாதான முயற்சிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருபவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தொலைக் காட்சியில் தோன்றி சில விளக்கங்களையும் அளித்தார்.

இந்தத் தொலைக்காட்சிச் செவ்வியில் பிரதமர் அளித்த விளக்கங்கள் சில மிகவும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புக் காட்டிவரும் சிங்கள சமூகத்தை மையமாகக் கொண்டே, முழுக்க முழுக்க சிங்கள மொழியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் அளிக்கப்பட்ட இந்த விளக்கங்களில், தமிழ் மக்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டிய சில விடயங்களும் அடங்கியிருந்தன.அவைபற்றி ஆராய்வதே இப்பத்தியின் நோக்கமாகும்.

சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அதற்கான மாற்றுத் திட்டத்தை முன்வைப்பார்களா?,போர்புரிய வேண்டும் என்பவர்கள் போர்க்களத்துக்கு வருவார்களா? என்பதுபோன்ற சில முக்கிய வினாக்களை சிங்களச் சமூகத்தை நோக்கி விடுத்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள்,இந்த சமாதான முயற்சிகளின் மூலம் உண்மையில் சிங்கள சமூகம் அடைந்துள்ள நன்மைகளையும் நாசூக்காகச் சுட்டிக் காட்டியுள்ளார். பிரதமரது உரையில் தமிழ் மக்கள் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டிய பகுதி இதுதான்.

அப்படி என்னதான் ரணில் தனதுரையில் குறிப்பிட்டார்?.

இரண்டு விடயங்களை அவர் சுட்டிக்காட்டிப் பேசினார்.

முதலாவதாக, '2001ஆம் ஆண்டில்,இலங்கையில் தனிநாடு ஒன்று உருவாகும் நிலைமை ஏற்பட்டது' என்பதை அவர் சிங்கள மக்களுக்குச் சுட்டிக் காட்டிப் பேசியிருந்தார்.

இரண்டாவதாக, இந்த நிலை எப்படி ஏற்பட்டது என்பதை அவர் விளக்கியிருந்தார்.

'இராணுவம் ஆனையிறவை இழந்து யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்ட சூழ்நிலையிலேயே நாம் பேச்சுவார்தைக்கு சென்றோம்' என்று அவர் அப்போது இருந்த சூழ்நிலையை சிங்கள மக்களுக்கு ஞாபகப் படுத்தினார்.

இவைதான் தமிழ் மக்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விடயங்கள்.

> சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அதற்கானமாற்றுத் திட்டத்தை முன்வைப்பார்களா?,போர்புரிய வேண்டும் என்பவர்கள் போர்க்களத்துக்கு வருவார்களா?

தமிழ் மக்களுக்கு ஏலவே தெரிந்த விடயங்கள்தான் என்றாலும்,இந்த இடத்தில் ஒருதடவை அப்போதிருந்த சூழ்நிலையை மீட்டிப் பார்ப்பது பொருத்தமானது.

பிரதமர் ரணில் அவர்கள் இந்தளவுக்கு அச்சத்துடன் குறிப்பிடும் அப்போதைய சூழ்நிலைதான் என்ன?. யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதையைத் திறந்து, விடுதலைப்புலிகளையும்,தலைவர் பிரபாகரனையும் அழிப்போம் என்று சூளுரைத்து அப்போதைய அரசினால் ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறு படைநடவடிக்கை 18 மாதங்களாக இழுபட்டு,பின்னர் புலிகளின் ஒரு சில நாளைய தாக்குதல்களால் முற்றாகச் சிதறடிக்கப்பட்டதைத் தொடர்ந்து,சிறிலங்காப் படைகளினால் உருப்படியாக எந்தவொரு வெற்றியையும் தமிழர் தாயகத்தில் பெறமுடியவில்லை.

ஜயசிக்குறு தோல்வியைத் தொடர்ந்து,எவராலும் வீழ்த்த முடியாதது என அமெரிக்க இராணுவ வல்லுநர்களாலேயே வர்ணிக்கப்பட்ட (இதனை பிரபல இராணுவ ஆய்வாளர் ஒருவர் ஆங்கில வெளியீடான ''மிறர்'' சஞ்சிகையில் ஆனையிறவுப் போர் நடைபெற்ற காலத்தில் குறிப்பிட்டு எழுதியிருந்தார்) ஆனையிறவு படைத்தளம் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதுடன்,அதனைத் தொடர்ந்து புலிகள் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றக் கூடியநிலைக்கு வளர்ந்திருந்தார்கள்.இதனையே ரணில் விக்கிரமசிங்க சிங்கள மக்களுக்கு நினைவுபடுத்த முனைகிறார்.

ஆனையிறவுத் தோல்வியைத் தொடர்ந்து அதிலிருந்து மீள்வதற்காக சிறிலங்காப் படைகளின் முழுப்பலத்தையும் பயன்படுத்தி நடாத்தப்பட்ட தீச்சுவாலை படைநடவடிக்கைக்கு ஏற்பட்ட படுதோல்வி, இனிமேல் சிறிலங்காப் படைகள் மீண்டெழவே முடியாது என்றதொரு நிலையையே ஏற்படுத்தி விட்டிருந்தது.

இக்காலப்பகுதியில்,ஏலவே தலைநகர் கொழும்பிலும் கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீதான தாக்குதலையும் எதிர்கொண்டு சிறிலங்கா அரசு மிகவும் துவண்டு போயிருந்தது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.



இப்போது பிரதமர் ரணிலின் உரையை மீளவும் ஒருதடவை கவனித்துப் பாருங்கள்.

'2001இல் தனிநாடு ஒன்று உருவாகும் நிலைமை ஏற்பட்டது'.

'இராணும் ஆனையிறவை இழந்து யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்ட சூழ்நிலையிலேயே பேச்சுவார்த்தைக்குச் சென்றோம்'.

**ராஜீ**

---

# உணரப்படாத பெண்ணின் உழைப்பு

**உழைப்பு** என்பது சகல மனிதர்களுக்கும் பொதுவானது, காலம் காலமாய் உழைப்பு என்பதன் அர்த்தம் ஊதியம் பெறுவதை அடிப்படையாகக் கொண்டதாகவே கருதப்படுகிறது.

'வீட்டைவிட்டு வெளியே சென்று தொழில் புரிவது உழைப்பு, என்றும், உழைக்குமிடத்திலிருந்து ஊதியத்தை வீட்டுக்கு கொண்டுவருவது பிரயோசனம் அல்லது பயன்பாடு' என்றும் காலம் காலமாய் நிலவிவந்த கருத்தின் உருவாக்கத்தினாலேயே வீட்டுப் பணியில் ஈடுபடும் பெண்களை 'சும்மா இருப்பவர்'களாக நினைக்கும் மனப்பாங்கு வளர்ச்சி கண்டது எனலாம்.

'சும்மா இருத்தல்' என்ற இந்த சொற்பதத்தின் கருத்தினை ஆராய்ந்தால் - 'வீட்டைவிட்டு வெளியே வேலைக்குச் செல்லாமை' என்பதாக இருக்கிறது.

'உங்கள் மனைவி என்ன செய்கின்றார்....?'

'சும்மா இருக்கின்றார்...'

உங்கள் அம்மா என்ன தொழில் செய்கின்றார்...?'

'சும்மா இருக்கின்றார்...'

'உங்கள் சகோதரி என்ன செய்கின்றார்.....?'

'ஓ.எல். எடுத்திட்டு சும்மா இருக்கின்றார்...'

இப்படியான கேள்விகளையும் பதில்களையும் நாளாந்தம் நாம் வாழ்கின்ற சமூகத்தில் பரவலாகப் பார்க்கின்றோம், அறிகின்றோம்.

வீடு சார்ந்த பெண்ணின் உழைப்பு இங்கே உணரப்படுவதில்லை. அதாவது ஊதியம் கிடைக்கும் உழைப்பே பெருமைக்குரியது என்கின்ற ஆழமான கருத்து பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

ஆனால், ஊதியம் எதுவும் பெற்றுக் கொள்ளாமல், தாயாக, மனைவியாக, சகோதரியாக வீடுகளில் உழைக்கும் பெண்களின் உழைப்பு அவர்களுடைய "நாளாந் கடமைகள்" என்கின்ற சுலபமான வரையறைக்குள் மறைக்கப்பட்டு விடுகின்றது.



வீட்டில் இருக்கும் பெண் சமையல் செய்பவளாக, குழந்தைகளுக்கு கல்வியூட்டும் ஆசானாக, வீடுவாசல் பராமரிப்பவளாக, வீட்டை நிர்வகிக்கும் நிர்வாகியாக, வீட்டைப்பாதுகாக்கும் காவலாளியாக எத்தனையோ விதமாக உழைக்கின்றாள்.

இப்பணிகளுக்கான ஊதியம் என்று நாம் பார்த்தால் இவர்களே கூடிய உழைப்பாளிகளாகவும், ஊதியம் பெற வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

இதேபோல், வீட்டுப் பணிகளுடன் மிகவும் பிரயத்தனப் பட்டு கால்நடை வளர்ப்பதிலும், வீட்டுத்தோட்டங்கள் செய்வதிலும், சிறுசிறுகைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதிலும் பெண்கள் ஈடுபடுவதை நாம் காண்கிறோம்.

வீட்டுக்கு வெளியே சென்று வருவாயை ஈட்டும் பெண்ணின் உழைப்பைப் போன்றே, வீட்டிலும் உழைக்கும் பெண்ணின் உழைப்பும் பயன்மிக்கது என்கின்ற கருத்து உருவாக்கப்படுவது அவசியமாகிறது.

'நீ வீட்டில் சும்மாதானே இருக்கிறாய்' என்று பார்க்கும் பார்வைகளில் மாற்றம் தேவைப்படுகிறது. இப்பெண்களின் உடல் உழைப்பு சமூகத்தில் பொருளாதார முக்கியத்துவம் கொண்டது என்பதை உணரச் செய்ய வேண்டும்.

இங்கு இன்னுமோர் உண்மையை நாம் உணரக் கடமைப்படுத்தப் பட்டவர்களாயிருக்கின்றோம். வெளியே வேலை செய்து வருவாயுடன் திரும்பும் பெண்ணின் (அல்லது ஆணின்) வேலை நேரம் மட்டுப் படுத்தப்பட்டதாக இருக்கின்றது. வீட்டில் கடமையிலீடுப்டும் பெண்ணின் வேலை நேரம் அப்படிப்பட்டதல்ல என்பதை நாம் நேரடியாகவே தரிசிக்கிறோம்.

பெண்வேலை செய்வதும், செய்யாமலிருப்பதும் அவரவர் தனிப்பட்ட பிரச்சினை என்றபோதிலும் - கடினமாக உழைத்தும் அது கருத்தில் எடுக்கப்படாதது - கவனிக்கப்படாதது என்பது ஒரு பொதுப் பிரச்சினையாகவும், கருத்தியல் தெளிவின்மையையுமே வெளிப்படுத்துகிறது எனலாம்.

காலம் காலமாக ஊட்டி வளர்க்கப்பட்ட கருத்துருவாக்கச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு புதிய சிந்தனைகளை எதிர்கொள்ளும் மனமாற்றம் இன்றைய காலத்தின் தேவையாகிறது.

குடும்பத்தின் பிரதான உழைப்பாளிகளாக இருக்கும் பெண்களின் உழைப்பை உணரும் அல்லது ஏற்றுக்கொள்ளும். மனப்பாங்கு சமூக உறுப்பினர்கள் அனைவருக்கும் உரியதாகிறது. தொழிற்பாகுபாடு என்பது களையப்பட்டு எங்கு வேலை செய்தாலும் அது பயனுள்ள உழைப்பாகவே கருதப்பட வேண்டும்.

பெண்களைப் பெருமைப்படுத்தாத எந்தவொரு சமூகமும் விடிந்ததாய் வரலாறில்லை.

**ஆதிலட்சுமி சிவகுமார்**



# தீ சுமந்த நிலம்

## சத்ஜெய எதிர்ச்சமர்

சித்திரக்கதை- 11

ராகவன்






# குதூகலம்

**காதலன்:-**
"என்ன.... உனக்கு.... நீ பெரிய சந்திரிகா என்ற நினைப்போ...? "
**காதலி:-**
"என்ன சொல்லுறீங்க....?'
**காதலன்:-**
"பின்னையென்ன எப்பபார்த்தாலும் என்னை மணித்தியாலக் கணக்கிலே காக்கவைத்து விட்டு... தாமதமாகத்தான் வாறாய்...."

● ● ●

'என்ன இப்போ உங்க வீட்டிலை உங்களுக்கும் மனைவிக்கும் சண்டைச் சத்தத்தையே காணோம்...?'
'போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது'
'என்ன சொல்லுறீங்க...?'
'இப்படியே சண்டைபிடிச்சா இனிமேல் காசு அனுப்பமாட்டேன் என்று நோர்வேயிலிருந்து மகன் கடிதமெழுதீட்டான்... அதுதான்...!
'ஓ... நீங்களும் நோர்வேயின் அநுசரணையுடன் தான் போர் நிறுத்தம் செய்திருக்கிறீர்கள்.... என்ன..."

**டொக்டர்:-**
"நேற்றுத் தந்த மருந்தை குடித்தீர்களா..... அதற்கு ஏதாவது சுகம் தெரிகிறதா....?"
**நோயாளி:-**
"நீங்கள் தானே காற்றுப் படாமல் இறுக்கி பூட்டி வையுங்க என்றீர்கள்... நான் போத்தலைத் திறக்கவேயில்லை... டொக்டர்..."
**டொக்டர்:-**
'?..?.....?'

● ● ●

"எனது மனைவி எனக்கு உயிர் மாதிரி..."
"அவ்வளவு அன்பா அவள்மீது..."
"பின்னை.... அவள் தனக்கு ஆயுள் காப்புறுதி கட்டிவருகிறாள் அல்லவா...?"

● ● ●

**ஒருவர்:-**
"என்ன எதற்கெடுத்தாலும் ஜோர்ஜ் புஷ் மிரட்டுறமாதிரி என்னையும் வெருட்டுறாய்....?"
**மற்றவர்:-**
"என்ன செய்யிறது உன்னைப் பார்த்தா 'பின்லேடன்' மாதிரியெல்லே இருக்கு....."

"ஒரேயொரு படம்தான் எடுத்தேன்... படுதோல்வி... இருந்த முதல் எல்லாமே போட்டுது....."
"ஐயோ பாவம்....!"
"நீ எடுத்த படத்தின் பெயர் என்ன?"
"முதலுக்கே மோசம்...."
......!'

● ● ●

"கவிஞரே உங்களுக்கு ஒரு விழா எடுக்க நினைக்கிறம். சந்தோசம் தானே...."
"ஐயையோ.... எனக்கு விழாவும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்...."
"ஏன் அப்பிடிச் சொல்லுறீங்க....."
"கவிதை உலகிலை நான் இன்னும் விழாமல் நிலையாய்த்தான் நிக்கிறன்.... விழுந்து போனவங்களை நிமிர்த்தத்தான் விழா....! எனக்கெதற்கு விழா...."

● ● ●

"ஒருசரித்திரத் தொடர்கதை கனகாலமா எழுதிறன் இன்னும் முடியேல்லை...."
"அப்படியா.... கதைக்கு என்ன பெயர்...."
"ராஜராஜ, ராஜாதிராஜ, ராஜகம்பீர, ராஜகோலாகல, ராஜமார்த் தாண்ட ஜெகவீரபாண்டிய..."
"......"
"என்னையா..... கதையின்ரை பெயர் சொல்லி முடிக்கமுன்னமே தலைசுற்றி விழுந்திட்டாய்.....?"

**ஞானி:-** "வாழ்வாவதுமாயம்.... மண்ணாவது திண்ணம்....."
**பக்தன்:-** "சாமிசொல்லுறது முழுதும் உண்மை....."
**ஞானி:-** "கையிலே என்ன புத்தகம் வைத்திருக்கிறாயப்பா...?"
**பக்தன்:-** "புத்தாண்டுப் பலன்கள்" புத்தகம்.....
**ஞானி:-** "அப்பிடியா....... எனது கும்பராசிக்கு என்ன பலன் படி பார்க்கலாம்......"
**பக்தன்:-** "........?? "

● ● ●

**சோதிடர்:-** "தம்பி... நீ... தண்ணி போடுறதை நிப்பாட்டும்....!"
**இவர்:-** "ஏன் அப்பிடிச் சொல்லுறீங்கள்..?"
**சோதிடர்:-** "உமக்கு தண்ணீரிலை தான் கண்டம் என்று சாத்திரப்பலன் சொல்லுது...."

● ● ●

**அவர்:-** 'காஸ்' விலை உயர்ந்து கொண்டே போகுது....
**இவர்:-** 'காஸ்' என்றால் அப்பிடித் தான் இருக்கும்.... வாயுதானே.... காற்றிலை மிதந்து மேலே போய்க்கொண்டுதான் இருக்கு....

**குதூகலிக்கலாம்.... குதூகலிக்கப்பண்ணலாம்...**

உங்கள் அனுபவத்தை வைத்து குதூகலம் பகுதிக்கு தரமான நகைச்சுவைகளை எழுதி அனுப்புங்கள். குதூகலிக்க முடிந்தால் உங்களை பிரசுரித்து விடுகிறோம்.

பொய்மையான நெஞ்சம் அறிந்ததை, பொய்மையான வதனம், மறைக்கும். - வில்லியம் ஷேக்ஸ்பியர்

## எழுத்தாளர்களுக்கு!

எழுதத் தெரிந்தும் எழுதாது உறங்கும் எமது எழுத்தாளர்களே! உங்களிற்கு எழுத்துத்துறையில் ஆர்வமில்லையா? அல்லது எங்களோடு உங்களிற்கான தொடர்பு இல்லையா? கவலையை விடுங்கள். உங்கள் சுயவிபரத்துடன் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் முன்னேற்றத்திற்கு நாங்கள் எங்களது கரங்களைத் தருகிறோம்.



அனுப்பவேண்டிய முகவரி:

**வெள்ளிநாதம்**
யாழ்.சாலை,
கிளிநொச்சி.

## தனியார் கல்வி நிலைய பொதுக் கலந்துரையாடல்

வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கிவரும் தனியார் கல்வி நிலையங்கள், தொழில்சார் பயிற்சி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் 15-03-2003 நாளை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பி.ப 2.00 மணிக்கு நடைபெறும் பொதுக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

குறிப்பு:-
**15-03-2003 சனிக்கிழமை தனியார் கல்வி நிலையங்கள் தொழில்சார் பயிற்சி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் யாவற்றையும் நிறுத்தி ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.**

தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

(சி-8003)


SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

SONY
FD Trinitron
WEGA

சமதிரை (Flat TV)
தொலைக்காட்சிப்பெட்டி




சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்

"இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சொனியை வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டாம்"

சீடில்ஸ்

ஏக விநியோகஸ்தர் கிங் பரட்ஸ்

இல.20, பிரதான வீதி,
வவுனியா.

T.P: 23123

(சி-7275)


## "ஈழநாதத்தின் வார வெளியீடான" வெள்ளி நாதத்தின் விளம்பரக் கட்டணம்

| அளவு | உட்பக்கம் கறுப்பு வெள்ளை | பின் பக்கம் வர்ணம் (கலர்) |
|---|---|---|
| முழுப்பக்கம் | 12000\= | 20000\= |
| அரைப்பக்கம் | 6000\= | 10000\= |
| செ. மீ. கொலம் | 60\= | 100\= |
| ஒப்பந்த அடிப்படையில் | 48\= | 80\= |


# இன்று முதல்...
## பளை நகரிலும் தன் பணி தொடர்கின்றது

# தமிழீழ வைப்பகம்

உங்கள் வளமான வாழ்விற்கான
பல்வேறுபட்ட
மேம்பட்டசேவைகளுடன்

உங்கள்
நம்பிக்கையின்
சின்னம்

உங்கள் அருகில் உங்கள் தெரிவில்
உங்களிற்காகவே

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

# தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-8002)

# நேர்நோக்கு

## ஆபத்துக் குறித்த எச்சரிக்கை

பிரதான எதிர்க்கட்சிகளான பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும், தேசிய ஐக்கிய முன்னணியும் (EM) இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி அசம்பாவிதம் ஏதுமின்றி நடந்தேறியிருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் போது தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் நிகழ்த்தப் படலாம் என சிறிலங்காவின் எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் சுமத்திய குற்றச்சாட்டு தமிழ்மக்கள் மத்தியில் அச்சநிலையைத் தோற்றுவித்திருந்தவேளையில், இவ்வாறு அமைதியாக முடிவடைந்திருப்பது தமிழ்மக்களுக்கு நிச்சயம் ஆறுதல் தரும் விடயமாகும்.

அமைதிப் பேச்சுக்களுக்கு முற்றிலும் விரோதமான போக்கைக் கொண்ட மூன்று கட்சிகள் இணைந்து நடத்திய பேரணியின் போது தற்போதுள்ள அமைதிச் சுழலைப் பாதிப்படையச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவர்கள் யார்? என்பது குறித்து முடிவு செய்ய விவாதம் எதுவும் நடத்தத் தேவையில்லை. அதிகாரத்தைக்கையில் வைத்துக் கொண்டு அதனைப் பிரயோகிக்க முடியாமல் திண்டாடும் பொ.ஐ.மு., இனவாதப் பிரச்சாரங்கள் தென்பகுதி மக்கள் மத்தியில் எடுபடாது ஏமாற்றம் அடைந்திருக்கும். ஜே.வி.பி. சமாதானப் பேச்சுக்களில் தமது பிரசன்னமின்மைகுறித்து மனக்கசப்படைந்திருக்கும். தேசிய ஐக்கிய முன்னணி என்பன கூட்டுச் சேர்ந்திருக்கின்றன.

இவர்களில் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலம் தமிழ் மக்கள் மிகவும் இன்னல் அனுபவித்த காலமாகும். தமது ஆட்சியை நீடித்துக் கொள்வதற்காக தமது இருப்பை நிலை நிறுத்துவதற்காக. தமிழ் மக்கள் மீது தீவிரமான கொடூர யுத்தத்தைத் தணித்த காலமாகும். தனது முப்படை களையும் கொண்டு தமிழர் தாயக பூமியை முற்று முழுதாக ஆக்கிரமித்துவிட முயன்ற காலமாகும்.

தமிழர் தாயகத்துக்கு வெளியே வாழ்ந்த மக்களை எப்பொழுதும் சந்தேகக்கண் கொண்டே நோக்கி அவர்களை அடிமைகளிலும் கேவலமாக நடத்திய ஆட்சி பொ.ஐ.மு. ஆட்சியாகும்.மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் தீவிர வேட்கையிலுள்ள அது எதுவும் செய்யத் தயாராகவே உள்ளது.

சிறிலங்காவுக்கே கேடு விளைவித்த யுத்தத்தை மீண்டும் எப்படியாவது ஆரம்பித்து விட வேண்டும் என்ற முனைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஈடுபட்டுள்ளதாக சந்தேகம் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு. பாதுகாப்பு அமைச்சை அவர் கைவிட்டுள்ள போதிலும் முப்படைகளும் முப்படைத் தளபதிகளும் அவர் பொறுப்பிலேயே உள்ளனர். படையினரின் சமாதான விரோதப் போக்கின் பின்னணியில் சனாதிபதி சந்திரிகா உள்ளார் என்ற மன உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுக்கு அவரது கட்சி என்ன கேட்டையும் விளைவிக்கக் கூடியது என்பதில் தமிழ் மக்களுக்குச் சந்தேகமில்லை. இந்த வகையில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறை வெடிக்கலாம் என்ற அவரின் எச்சரிக்கையானது தமிழ் மக்கள் மத்தியில் அச்ச உணர்வைத் தோற்றுவித்ததில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

இவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி.யோ அடிப்படையில் மார்க்சீயம் பேசினாலும் இனவாதக் கட்சியாகும். மார்க்சீய அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது குறித்த சிந்தனை எதுவுமில்லாத அக்கட்சி தமிழர்களின் போராட்டத்தை இராணுவவரீதியில் நசுக்கி விட வேண்டுமென்ற கொள்கையை அது விடாப்பிடியாகக் கொண்டுள்ளது.

இரு முறை ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டு தோல்வி கண்ட அது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற சிங்கள மக்களுக்கு எதிராகவே பல வன்முறைகளைப் புரிந்த குற்றச் சாட்டுக்கும் உள்ளாகியுள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராக குறிப்பாக தமிழ் வர்த்தகர்களுக்கு எதிராக காழ்ப்புணர்ச்சி கொண்ட ஜே.வி.பி.யின் பேரணியின் போது தமிழ் மக்கள் மீதான வன்முறை ஏற்படலாம் என்ற எச்சரிக்கை புறக்கணிக்கத் தக்கதொன்றல்ல.

எவ்வாறாயினும் ஆர்ப் பாட்டப் பேரணி அமைதியாக முடிந்திருக்கிறது ஆனால் ஆபத்து விலகி விட்டதா? என்ற கேள்விக்கு இலகுவில் விடையளித்து விட முடியாது. எனினும் ஆபத்து குறித்த எச்சரிக்கையை அது விடுத்திருக்கின்றது. அதாவது எவ்வேளையிலும் இவர்களால் ஏற்படக் கூடிய ஆபத்தை இது வெளிப்படுத்தயிருக்கிறது எனலாம்.

வேலவன்

(02ம் பக்கம் தொடர்ச்சி..)
அமைதிக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களேயாகும்.

தொடரும் இத்தகைய நடவடிக்கைகள் அமைதியை விரும்பும் சமாதானத்தை வரவேற்கும் மக்களை விரக்தியடையவே வைக்கும்.

பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படவில்லை. இராணுவத்திற்கான ஆயுத தளபாடங்கள் நவ நவீனமாக இறக்குமதி செய்யப்படும் நிலையில் மாற்றமில்லை. வெளிநாட்டு இராணுவப் பயிற்சிகள் சிறிலங்காப் படையினருக்கு சமாதானம் பற்றி பேசும் நாடுகளாலேயே வழங்கப்படுவது தான் கோமாளித்தனமாகஉள்ளது. அனைவருக்கும் கட்டாய இராணுவப்பயிற்சி என்று மொரகொடவே கோச மெழுப்புகிறார். இவர் தான் ரணிலின் ஆஸ்தான ஆலோசகர் கடற்படை எதற்கும் தயார் நிலையில் உள்ளதாக ரணிலே சந்திரிகாவுக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளார். இந்த நிலையில் விடுதலைப்புலிகளும், தமிழ்மக்களும் கைகட்டி மௌனம் காக்க வேண்டும் என்று சமாதான ஏற்பாட்டாளர்களும், சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கக்கூடாது.

குட்டக் குட்டக் குனிதல் முட்டாளினதும் கோழையினதும் இயல்பேயாகும் ஒரு பிரச்சினை குறித்து விசாரிக்க எடுக்கும் நீண்டகால தாமதத்தினுள் மற்றொரு சம்பவம் நிகழ்ந்துவிடுகிறது. இப்படியே தொடர்கையில் இழப்புகளைச் சந்திப்பதும் ஏமாற்றப்படுவதும், அவமதிப்புக்குள்ளாவதும் தமிழ்மக்கள் மட்டுமே என்பதை சர்வதேசம் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இந்நாட்டில் சமாதானம் ஏற்படக்கூடாது என்பதில் அதிக ஆர்வமும் தமிழ்மக்களுக்கு விடுதலைப் புலிகள் மூலமாக நியாயமான தீர்வு ஒன்று ஏற்படக்கூடாது என்பதில் வெகுவான அக்கறையும் கொண்ட அநாகரிகமான சுயநல நோக்கம் கொண்ட பல்வேறு உள்மற்றும் புற சக்திகள் சமாதான விரோதசக்திகளுக்கு பின்பலமாக, பின்புலத்தில் நின்று இயங்குகின்றனர் என்பது தமிழ்மக்களுக்கு தெளிவாகத் தெரியும்.

ஆனாலும் பொறுமையோடு அவர்கள் நியாயத்தை எதிர்பார்க்கின்றனர் அரசிடமிருந்து....

சனாதிபதியிடமிருந்து...

அமைதி ஏற்பாட்டாளர்களிடமிருந்து

அனைத்துலக சமூகத்திடமிருந்து....

இதனை ஒரு பிச்சைக்காரனின் யாசிப்பாக எவரும் கருதுவார்களேயானால் அதனால் நஷ்டமடையப்போவது அவர்களே... இதனை உலக வரலாறுகளில் இருந்து அவர்கள் கற்றுக்கொள்வது அவசியம்.

வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட 'சம்பவத்தை' வழமைபோல் அரசும் ஏனையோரும், சாதாரணமாகக் கருதி அலட்சியம் செய்து, அதே போன்ற செயற்பாடுகளைத் தொடர்வார்களேயானால்.....


சமாதானத்தைக் கொன்றவர்கள் என்ற அவப்பெயரையும் அவர்களே சுமக்க நேரிடும்.

சமாதானம் கானல் நீரா- என்ற கேள்விக்கான விடையும் அவர்களிடம் தான் உள்ளது.

வெறுமனே பேச்சு வார்த்தை மேசையில் அமர்ந்து பேசி, அறிக்கைகள் வெளியிடுவதன் மூலம் சமாதானத்தை நகர்த்தி ஆட்சிக்காலத்தை கடத்தி, தமிழ்மக்களை ஏமாளிகளாக்க சர்வதேச சமூகமும், சமாதான ஏற்பாட்டாளர்களும் சிறிலங்கா அரசுக்கு துணை போவார்களா...? அல்லது.....

அடுத்துவரும் வாரங்கள் அதற்கான பதிலைக் கொண்டவையாகவே இருக்கும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-09



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 09

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

பெயர் : ............................................ ஈழநாதம்

முகவரி :........................................ யாழ்சாலை,

........................................ கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 08



கருணாகரன்
சிவநேசன்
மயில்வாகனபுரம்
பிரமந்தனாறு

### பரிசுக்குரிய வரிகள்

கவசம் தானென்று, கவனம் இழக்காதே தம்பி!
சிரித்தது போதுமடா. சிந்தித்துப், பரடா!
பொறுக்கிய,கவசத்திலும்,பொறி இருக்கலாம்,
கைதொடலாகாது, காண்பி, அது சார்ந்தோர்க்கு!!

### பாராட்டுக்குரிய வரிகள்

நான் எதிரியின் பிள்ளையல்ல-அவனை
வென்ற புலிகளின் பிள்ளை-இது
வெறும் தலைக்கவசம் மட்டுமல்ல-எம்
இனத்திற்கு அண்ணன் தந்த வெற்றியின் மகுடம்.

வீ.ஜெயப்பிரகாஸ்
வர்த்தகப்பிரிவு(2003)
கிளி/மத்திய கல்லாரி

பகையெறிந்த கவசம் பாலகன் குடையானது
அடைமழைக்கும் கொடும் வெயிலுக்கும் இதமானது
ஆயினும் நீ கவனமடா-அந்தோA9 வழியே(செஞ்)சிலுவையர்
அவர் கண்ணில் நீ பாலகர் படைவீரனடா!

க.கிருபாகரன்
யாழ்சாலை,கிளிநொச்சி.

ஆடை அணிகலன்
ஆயுதங்களை ஆமிமாமா
ஓடும் போது-ஏம்மா
விரும்புவதில்லை

S.ரவிக்குமார்
யாழ்சாலை, முருகண்டி.

ஓ! தம்பியே உன் சிரிப்பு புரிகின்றது.
வெறியாட்டம் போட்டு வீடெரித்த.
மடையர்களின் மண்டைக்கவசத்தை.
உன் புலி மாமன் வென்றமையோ.

ரா.ரதன்(யாழவன்)
கைவேலி.

தலைமண்டைக்குள்ளே எதுவுமின்றி
தலைக்கவசத்தோடு ஆமிக்காரன் வந்தாண்டா
தலைதப்பியதே தம்பிரான் புண்ணியம்-என்று
இதைப்போட்டு தப்பியே ஓடிட்டாண்டா.

பே.ஜீவகுமார்
இல:749, யோகபுரம் மத்தி

ஊர் திரும்பி உளம் மகிழ்ந்து சிரிக்கும்
செந்தமிழ்ப்பிஞ்சே உன் உறவைக்குலைத்து
ஊரை எரித்தவனின் உலர்ந்து கருகிய உடலருகில்
கிடந்த தலைக் கவசமா?

N.S.ஜோதீஸ்வரன்,
அக்கராயன்குளம்

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

# எங்கள் குரலையும் கேளுங்களேன்



சிறுவர் உரிமைகளுக் காக போராடும் சிறுவர் அமைப்புகள் இவர்களின் குரல்களை செவிமடுக் குமா?





சிறுவர் போராளிகள், சிறுவர் துஸ் பிரயோகம் என முழங்கும் நாடுகளுக்கு கோரிக்கைகள் விடுக்கும் இச்சிறுவர் களின் உணர்வுகள்...

மேலே ஈராக்கிய தேவாலயம் ஒன்றில் தொழுகையில் கலந்துகொண்டிருக்கும் சிறுமி ஒருவரை காணலாம்.

ஈராக் மீதான யுத்தத்திற்கு தயாராகி வரும் அமெரிக்க படைகளிற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றில் கையில் சமா தான தீபம் ஏந்தியிருக்கும் ஈராக்கியச் சிறுவன்



அண்மையில் அனைத்துலகப் பெண்கள் தினத்தன்று கன்னத்தில் போருக்கெதிரான வசனங்களைத்தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தென்கொரியச் சிறுமி ஒருவர் மேலே.

பக்கத்தில் அமைந்துள்ள ஐ.நா. சபைக் கட்டடத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஈராக் கியச் சிறுமி ஒருத்தி போருக்கெதிராக உரத்து சத்த மிடும் காட்சி கீழே.












பக்கவிளைவு அற்றது

## அழகிய கூந்தலின் ரகசியம்

## பயோட்டினெக்ஸ்-E

### எது உங்கள் பிரச்சினை ?

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

இயற்கையான பயோட்டினெக்ஸ் -E தெற்காசிய மக்களுக்கான பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

**யாழ் முகவர்:**
ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 2223191

**வன்னி முகவர்**
அகிலன்ஸ் பார்மசி,[பிள்ளையார் மருந்தகம்] கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பாவனை முறை:**
தினம் 2கப்சியூல்ஸ் 3மாத காலத்திற்கு பாவிக்கவும்

இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

BIOTINEX-E

Marketed By: Arkem Colombo
Tel: 470290, 075-344436 Email: arkem@sltnet.lk

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது. [சி-7807]



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.